RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 29, 24 யூன் 2022 இதழ்:- 09

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

# மீளத் திறக்கப்படும் பலாலி விமான நிலையம் இந்திய அழுத்தங்களுக்குள் இலங்கை அரசு?





பலாலியிலிருந்து தமிழகத்தின் இரண்டு பிரதான நகரங்களுக்கான விமான சேவைகள் எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என அறி விக்கப்பட்டிருக்கிறது. இது தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியான ஒரு செய்தியாக இருக்கலாம்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து, பலாலி விமான நிலையத்தின் நிலை குறித்து களஆய்வை மேற் கொண்ட அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனை அறிவித்தார். பலாலி யிலிருந்து சென்னைக்கும், திருச்சிக்கும் தினசரி விமான சேவைகள் ஜீலை முதலாம்(9ம் பக்கம் பார்க்க).

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

# 75 நாட்களைக் கடந்த “கோட்டா கோ கம”



ஜனாதிபதிக்கு எதிராக ‘கோட்டா கோ கம’வில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 75 நாட்களைக் கடந்திருக்கும் நிலையில் அதனை இரண்டா வது கட்டத்துக்குக் கொண்டு சென்றிருப்ப தாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருக்கின்றார் கள். ஜனாதிபதி செயலகத்தின் முன்பக்க வாயிலை மட்டுமே அடைத்து போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த இளைஞர்கள் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தின் ஏனைய வாயில்களையும் மூடினார்கள். அன் றைய தினம் ஜனாதிபதியின் 73 ஆவது பிறந்த தினமாக இருந்தமையாய் அதற்கு முதல் நாள் நள்ளிரவு 12.00 மணிக்கு(19ம் பக்கம் பார்க்க).

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

# இலங்கையில் உணவுப் பஞ்சம் ஏற்படும் போது உதவி செய்ய புலம்பெயர் தமிழர்கள் தயாராக இருக்க வேண்டும் - சாணக்கியன்



இலங்கையில் எதிர்வரும் எட்டாம் மாதமளவில் உணவு பஞ்சம் ஏற்படும் போது எம் மக்களுக்கு உதவி செய்வதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (4ம் பக்கம் பார்க்க)

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

**கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி! உறவுகளே! யூன் 25 முதல் 30 வரையான நாட்களுக்கு உணவளிக்க எவரும் இல்லை! முன் வாருங்கள்!**

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial

## Team SIVA WILL BRING THE BEST RESULTS!



18 Years Real Estate Experience

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




HOMELIFE
HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Central Park / Bramalea



**Brampton** 674,900
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted

### Park Rd / Wentworth



**Oshawa** $499,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Well Maintained Complex

### Kennedy & Progress



**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location

### Eglinton/Markham




**Scarborough** $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms

### Lawrence/ Galloway




**Toronto** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Mccowan/401




**Scarborough** $589,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Newly Renovated ,Open Concept

### Kennedy/401



**Scarborough** $599,900
Bedrooms: 1 Washrooms: 1
Close To High Way, Shopping Plaza

### Dixie/Clark



**Brampton** $629,900
Bedrooms: 3 Washrooms: 2
Upgraded & Spacious Corner Unit

### Eglinton/Markham




**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated & Low Maintenance Free

### Yonge/Davis



**Newmarket** $1,699,000
Bedrooms:4+1 Washrooms: 5
Over 4000 Sq Ft

### Hwy 7/ Leslie



**Markham** $649,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Open Concept, Newer Paint

### Don Mills/Eglinton




**Scarborough** $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

### Donald Cousens Pkwy / 16th Ave




**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere



**Scarborough** $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### Brimorton/ Scar. Golf




**Scarborough** $1,100
Bedrooms: 1 Washrooms: 1
Basement Apartment for Rent

### Major Mack/Mccowan




**Markham** $2,900
Bedrooms: 4 Washrooms: 3
Throughout Hardwood Floor

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன் கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவ இந்தியா தயார் என ஜனாதிபதியிடம் தெரிவிப்பு!



இலங்கையின் விரைவான பொருளாதார மீட்சிக்கு உதவுவதற்கு இந்தியா தயார் என இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ள இந்திய உயர்மட்ட குழு வினர் இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிடம் தெரிவித்துள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரிண்டம் பக்ஷி தனது டுவிட்டர் பதிவில் இதனை தெரிவித்து ள்ளார் அவர் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது

இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவாத்ரா இலங்கை ஜனாதி பதியை சந்தித்தார்.வெளிவிவகார செயலா ளருடன் இந்திய நிதியமைச்சின் செய லாளர் அஜய்சேத் மற்றும் பிரதம ஆலோ சகர் வி ஆனந்த நாகேஸ்வரன் ஆகியோ ரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்ட னர்.

இந்த சந்திப்பில் இலங்கையின் தற்போ தைய நிலை மற்றும் இந்தியாவின் உதவி குறித்து ஆக்கபூர்வமான பேச்சுக் கள் இடம்பெற்றன, முதலீடுகளை ஊக்கு வித்தல் இணைப்பு மற்றும் பொருளா தார இணைப்புகளை வலுப்படுத்துதல் மூலம் இலங்கையின் விரைவான பொரு ளாதார மீட்சிக்கு உதவுவதற்கு இந்தியா தயாராகவுள்ளது என்பதையும் இந்திய குழுவினர் வலியுறுத்தினர்.

இந்தியாவின் அயல்நாடுகளிற்கு முன்னு ரிமை என்ற கொள்கைக்கு இலங்கை எவ்வளவு முக்கியமானது என்பதும் இந்த சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

இரு தரப்பும் உறவுகளை மேலும் உறவுகளை வலுப்படுத்துவதற்கான அர்ப்பணிப்புகளை வெளியிட்டன.

இதேவேளை இந்திய நிதி அமைச்சின் செயலாளர் அஜய் சேத், தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரன் மற்றும் வெளியுறவு செய லாளர் வினய் குவாத்ரா ஆகியோர் பிரத மர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்தனர்.

# யாழ்.மாநகர எரிபொருள் நிலையத்தில் நியாயம் கேட்ட இளைஞன் தாக்கப்பட்டு மரணம்!




யாழ்ப்பாணம் மாநகர் மகாத்மா காந்தி (மணிக்கூட்டு) வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட இளைஞர் மருத் துவ சிகிச்சை பயனின்றி உயிரிழந்து ள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அழை த்து வரப்பட்டிருந்த சிலரே இளைஞன் மீது தாக்குதல் நடத்தியதாக அவரது ஊரவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் இளைஞன் மீது தாக்குதல் நடத்தப்பட்டு உடனடியாக அவர் யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் 22 யூன் 2022 புதன்கிழமை இரவு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். உடுவில் செப்பாலை கோவிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரசாந் (வயது-23) என்பவரே உயிரிழ ந்தார்.

ஊடக பயிலுநர் நண்பருடன் எரி பொருள் நிரப்ப இளைஞன் சென்றுள் ளார். அப்போது இடையில் புகுந்து வந்தவர்கள் எரிபொருள் நிரப்ப முற் பட்ட போது ஊடக நண்பர் காணொளி பதிவு செய்துள்ளார். காணொளி பதிவை தடுக்க எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் ஊடக பயிலுநரின் கையை முறிக்கியுள்ளார்.

அதன் போது நியாயம் கேட்க முற்பட்ட இளைஞனை எரிபொருள் நிலையத்தில் உள்ள மூவர் தலைக்கவசத்தினால் தாக்கியுள்ளனர். அதனால் இளைஞனு க்கு வாய், மூக்கு வழியாக குருதி ஓடியுள்ளது.

அங்கிருந்து வீடு சென்ற இளைஞன் மறுநாள் மதியம் நெஞ்சுவலி மற்றும் உடல் சோர்வடைய யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். எனினும் இரண்டு நாள்களின் பின் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழ ந்துள்ளார்என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணையில் இளைஞ னின் சடலத்தின் உடற்கூற்றுப் பரிசோ தனை யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் இடம்பெற்றது.

## மயிலிட்டி மக்கள்ஒன்றியம் - கனடா முக்கிய அறிவித்தல்!

மயிலிட்டி மக்கள் ஒன்றியத்தின் பதினாறாவது (16) கோடை கால ஒன்றுகூடல் எதிர் வரும் யூலை மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10:00 மணிக்கு மோனிங்சைட் (Morning side) பூங்கா தொகுதி 8இல் (Area 8) ஆரம்பமாகும்

மயிலிட்டி மக்கள் அனைவரையும் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு - திரு. குணசீலன் 647-330-9625

நன்றி.

தம்பிராசா குணசீலன் செயலாளர்

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# இலங்கையில் உணவுப் பஞ்சம் ஏற்படும் போது உதவி செய்ய புலம்பெயர் தமிழர்கள் தயாராக இருக்க வேண்டும் - சாணக்கியன்


இலங்கையில் எதிர்வரும் எட்டாம் மாதமளவில் உணவு பஞ்சம் ஏற்படும் போது எம் மக்களுக்கு உதவி செய்வதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

சுவிஸில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'நாங்கள் ஜனாதிபதியினை சந்தித்த போது அவரிடம் மிக முக்கியமாக சொன்ன விடயம், வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியினை செய்வதற்காக எங்களது புலம் தமிழர்கள் உதவி செய்வார்கள்.

ஆனால் அதற்கு நீங்கள் எங்களுக்கு அரசியல் தீர்வினை தர வேண்டும் என கூறியிருக்கின்றோம். ஆனாலும் இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது. எனினும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள அரசாங்கத்தினை காப்பாற்ற நாம் முயற்சிப்பதாக சிலர் சமூக வலைத்தளங்களில் விமர்சித்தனர்.

இன்று எங்களுடைய அரசியலை பொறுத்த வரையில் தமிழர்களுக்கு இரண்டு வகையான அரசியல் பிரச்சனைகள் காணப்படுகின்றன. முதலாவது எங்களது கடந்த கால வரலாறுடன் நாங்கள் எவ்வாறு முகங்கொடுப்பது.

அதாவது 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியும், அதற்கு முந்தைய காலப்பகுதியிலும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த விடயம், காணி அபகரிப்பு போன்ற



விடயங்கள் 2009 இற்கு முதல் இருந்தே தொடர்கின்ற விடயங்கள்.

இவற்றில் எதிர்காலத்தில் எங்களுக்கு இருக்கின்ற விடயங்களை பார்த்தால் அரசியல் தீர்வு என்ற விடயம் எங்களுக்கு மிக மிக முக்கியமான விடயமாக காணப்படுகின்றது. இவற்றை நாம் சமாந்தரமாக கொண்டு செல்ல வேண்டும்.

நாங்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதியினை சந்தித்து பேசுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசி வருகின்றோம்.

குறிப்பாக பொத்தவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தின் போது நாங்கள் முன்வைத்திருந்த கோரிக்கைகளில் இவையும் உள்ளடங்குகின்றன.

பலரும் கேட்கின்றார்கள் குருந்தூர் மலை விவகாரம் குறித்து ஏன் சாணக்கியன் எதுவும் பேசாமல் மௌனமாக இருக்கின்றார் என்று. நாங்கள் குருந்தூர் மலையினை சென்று பார்வையிட்டுள்ளோம். இந்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும் நீதிமன்றத்தின் உத்தரவினையும் மீறி ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி இவ்வாறான விடயங்களை செய்து வருகின்றார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள பல பகுதிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் எங்கெல்லாம் காணி அபகரிப்பிற்கான முயற்சிகள் இடம் பெறுகின்றனவோ அங்கெல்லாம் நான் இருந்திருக்கின்றேன். அவற்றினை எதிர்த்திருக்கின்றேன். இனியும் இருப்பேன்.

எங்களுடைய அரசியல் தீர்வின் ஊடாகவே இவற்றினை மாற்றியமைக்க முடியும். எங்களுடைய கைகளில் எங்களுடைய அரசியல் அதிகாரம் இருந்தால் நாங்கள் இதனை மாற்றியமைக்கலாம். எனினும் இது நீண்டகால போராட்டமாக இருகின்றது. இலங்கை வரலாற்றில் இது தான் எங்களுடைய காலமாக இருக்கலாம்.

எங்களது எதிர்காலம் எப்படியாக இருக்க வேண்டும் என சொன்னால் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் ஒன்றாக வாழ வேண்டும். முஸ்லீம்களிடமிருந்து கிழக்கினை மீட்க வேண்டும் என கூறி நாடாளுமன்றம் வருகை தந்த பிள்ளையானும், வியாழேந்திரனும், நஸீர் அஹமட்டுன் இணைந்து தற்போது பணியாற்றுகின்றனர். எனவே அரசியல் இலாபங்களுக்காக வாய்களில் வந்த அனைத்தினையும் சொல்லக் கூடாது. நாம் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும். அப்படி செய்யாவிட்டால் கிழக்கு மாகாணம் தமிழ் மக்களுக்கும் இருக்காது முஸ்லீம் மக்களுக்கும் இருக்காது. எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பஞ்சம் பசியிலும் திருந்தாத சிங்களப் பேரினவாதம்

சிங்கள மக்களின் பொறுமைக்கு எல்லை இருப்பதாகவும், அதனை சோதிக்க முயற்சிக்க வேண்டாம் என்றும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை எச்சரித்துள்ளார். முல்லைத்தீவு குருந்தூர மலை விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றும் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், முல்லைத்தீவு – குருந்தூர் மலையில் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்கு எதிர்ப்பு வெளியிட்டமையை தாம் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிரபாகரனின் கட்சி எனவும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். கோணகல கிராமத்தில் 54 சிங்களவர்கள் கொல்லப்பட்ட போது கொழும்பில் இந்து மத வேல் திருவிழா இடம் பெற்றிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.(22ம் பக்கம்)




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

25 யூன் 2022 சனிக்கிழமை

சனிப் பிரதோஷ விரதம்

28 யூன் 2022 செவ்வாய்க்கிழமை

அமாவாசை விரதம்

05 யூலை 2022 செவ்வாய்- ஆனி உத்தரம்

உபயம்:- லோகநாதன் (பாபு) சாந்தி குடும்பம்

21 பெப் 2022 முதல் இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# கொமன்வெல்த் 2022 குத்துச் சண்டைப் போட்டிக்கு பிரிட்டன் செல்லும் கிளிநொச்சித் தமிழ் வீரர்!






பிரித்தானியா பர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் 2022 போட்டிகளில் குத்துச்சண்டை போட்டிக்கு கிளிநொச்சியில் இருந்து முதன்முதலாக வீரர் ஒருவர் தெரிவாகியுள்ளார்.

கிளிநொச்சி தருமபுரம் நாதன் குடியிருப்பைச் சேர்ந்த விட்டாலிஸ் நிக்லஸ் என்னும் வீரரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தேசியப் போட்டிகளில் வடமாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி பல பதக்கங்களை வடமாகாணத்திற்காக பெற்றுக் கொடுத்தவர்.

இவரது திறமை காரணமாக இலங்கை தேசிய குத்துச் சண்டை அணிக்குள் உள்வாங்கப்பட்டு பல தகுதிகாண் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டி இந்த கொமன்வெல்த் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இப்போட்டிகள் எதிர்வரும் யூலை மாதம் 28ம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 08ம் திகதி வரை பிரித்தானிய புகழ்பெற்ற நகரான பர்மிங்ஹாமில் நடைபெறவுள்ளது.

இந்த போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வீரர்கள் ஒலிம்பிக் தகுதிகாண் போட்டிகளில் பங்கு பெறும் வாய்ப்புக்கள் உள்ளது.

இதேவேளை இந்தியாவில் நடைபெற்ற மிக்ஸ் பொக்சிங் தற்காப்பு கலை போட்டியில் தங்கம் வென்ற மாங்குளத்தைச் சேர்ந்த செல்வி ஜெகதீஸ்வரன் விஜிதா 20 யூன் 2022 நாடு திரும்பியிருந்தார். இவருக்கு மாங்குளத்தில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாங்குளம் பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து மாங்குளம் சந்தி வரை வீதி ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட விஜிதா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களும் மற்றும் கழக வீரர்கள் மாணவர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.


GTA Association of Tamil Seniors

ஜி.ரி.ஏ. தமிழ் முதியோர் சங்கம்

பதிவு இலக்கம் 001940195

Email: gtatamilseniors@gmail.com

Tell 416 454 1893 / 647 282 0149

மேற்படி சங்கத்திற்கு புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றார்கள். சனிக்கிழமைகளில் பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நேரில் வந்து சேர்ந்து கொள்ளலாம்.

Don Montgomery Community Center
2467 Eglinton Ave - East
Scarborough - Seniors Lounge

எமது சமூக சேவையாக நடத்தப்படும் இலவச ஜி.ரி.ஏ. திருமண சேவைக்கு எம்மை நாடுங்கள். தரவுகள் பாதுகாக்கப்பட்டு தொடர்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு

சிங்கராஜா 416 454 1893

வேலாயுதபிள்ளை 647 282 0149


# ஜனாதிபதியின் கனவு நிறைவேறுமா?

மீண்டும் போராட்டங்கள் துளிர் விடுகின்றன. போராட்டங்களுக்கான சூழல் இருக்கும் வரையில், இந்த நிலைமையை முற்றிலுமாக கட்டுப்படுத்த முடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் வரையில், தமது போராட்டங்கள் தொடருமென்று, கோட்டா கோ கம ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். ஆனால், ஜனாதிபதியோ தான் தோல்வியடைந்த ஜனாதிபதியாக செல்ல விரும்பவில்லை 69 இலட்சம் மக்களின் ஆணையின் அடிப்படையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் நான், எனது பணிகளை நிறைவு செய்துவிட்டுத் தான் வெளியேறு வேனென்று கூறி வருகின்றார். ஜனாதிபதியின் கனவு ஈடேறுமா?

ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அமைப்பதில், இன்னும் முழுமையான வெற்றியை, பெறமுடியவில்லை. 21 ஆவது திருத்தச்சட்டம் தொடர்ந்தும் இழுபறிநிலையிலேயே இருக்கின்றது. 21ஆவது திருத்தச்சட்டம் நிறைவேறும் வரையில் ஒரு ஸ்திரமான அரசாங்கம் உருவாகுவதற்கான வாய்ப்பில்லை. ஒருவேளை, 21 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேறாது போனால், இந்த அரசாங்கம், ஒரு தளம்பல் நிலையிலேயே இருக்க நேரிடும். அரசாங்கம் தளம்பல் நிலையில் இருக்கின்ற போது, அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களும் அவ்வப் போது வெளிக்கிளம்பும். இதனை தவிர்க்க முடியாது. ஏனெனில், பொருளாதார நெருக்கடி தீவிரமாக இருக்கின்ற போது, அரசாங்கம் உறுதியானதாக இருக்க வேண்டும். ஆனால், பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, ஏற்பட்ட அரசியல் நெருக்கடி இன்று வரையில் தீர்க்கப்படவில்லை.

இலங்கையின் முன்னைய ஜனாதிபதிகள் எவருமே சந்திக்காத நெருக்கடிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர் கொண்டிருக்கின்றார். இத்தனைக்கும் சிங்கள மக்களின் வரலாற்று தலைவனாக வேண்டுமென்னும் கனவோடு அதிகாரத்தை கைப்பற்றியவர். ஆனால், இன்றோ, ஒரு தோல்வியடைந்த ஜனாதிபதியென்னும் பெயரோடு, போய்விடக் கூடாதென்னும் கவலையோடு, நாட்களை கடத்திக் கொண்டிருக்கின்றார்.

ராஜபக்ஷ குடும்பத்தைப் பொறுத்தவரையில் தற்போது அதிகாரத்தில் இருக்கும் ஒருவர் என்னும் வகையில், அனைத்து ராஜபக்ஷக்களின் தவறுகளையும் சுமக்க வேண்டிய இக்கட்டு நிலையிலேயே, ஜனாதிபதி கோட்டாபய இருக்கின்றார். மகிந்த ராஜபக்ஷ வெளியேறியதைத் தொடர்ந்து, மகிந்த ராஜபக்ஷ அரசியல் அரங்கில் இப்போது பேசுபொருளாக இல்லை. பஸில் ராஜபக்ஷவும் இப்போது பேசுபொருளாக இல்லை. பொருளாதார நெருக்கடியில், நிதியமைச்சகராகவிருந்த, பஸில் ராஜபக்ஷவுக்கு பிரதான பங்குண்டு. ஆனால், அவர் வெளியேறியதைத் தொடர்ந்து, பஸில் ராஜபக்ஷவின் தவறுகளையும் ஜனாதிபதியே சுமக்க வேண்டியேற்பட்டிருக்கின்றது. அனைத்து ராஜபக்ஷக்களினதும் தோல்வியை சரி செய்து, ஒரு வெற்றி பெற்ற ஜனாதிபதியாக வெளியேற முடியுமா?

ஆனால், ஒரு விடயங்களை செய்துவிட்டு, மாறுபட்ட ஜனாதிபதியாக வெளியேறுவதற்கான வாய்ப்பும் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு இல்லாமலில்லை. சந்திரிகா குமாரதுங்க காலத்திலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது தொடர்பில் பிரஸ்தாபிக்கப் பட்டது. ஆனால், நடைபெறவில்லை. இப்போதும் பேசப்படுகின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்க வேண்டுமென்னும் வாதம், இன்று, சற்று வலுவாகவே எழுந்திருக்கின்றது. சஜித் பிரேமதாஸவும் அதனை ஆதரிப்பதாகக் கூறுகின்றார். ஆனால், ஒருவேளை, அவர் அதிகாரத்துக்கு வந்தால், அது நடக்குமா என்பது கேள்விக்குறி தான்.

சந்திரிகாவும் அப்படித்தான் கூறியிருந்தார். ஆனால், அதிகாரத்துக்கு வந்ததும் அது கிடப்புக்கு சென்றுவிட்டது. ஆனால், ஜனாதிபதி கோட்டாபய இந்த விடயத்தை(19ம் பக்கம் பார்க்க)


Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Phone : 416-289-9229

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# தமிழ்மக்களின் இனப்பிரச்சனைக்கு தீர்வைக் காணத் தவறியமேயே நாட்டின் பொருளாதாரம் மோசமடையக் காரணம் என்கிறார் சம்பந்தர்



நாடு எதிர் கொண்டுள்ள மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு தமிழ்தேசிய பிரச்சினைக்கு தீர்வை காணவேண்டும் அது மிகவும் முக்கியம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்து நாளிதழிற்கு அவர் இதனை தெரிவித்துள்ளார். தீர்க்கப்படாத பிரச்சினை சுதந்திரத்திற்கு பின்னர் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்து நாளிதழ் உடனான கருத்துப் பரிமாற்றத்தின் போது இலங்கையின் அரசியல் தலைமைத்துவம் தவற விட்ட பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணங்களை நினைவுகூர்ந்துள்ள சம்பந்தன் அரசியல் தலைமையின் இவ்வாறான நடவடிக்கைகள் இனமோதல் தீவிரமடைவதற்கும் நாட்டை நீடித்த உள்நாட்டு போருக்குள்ளும் தள்ளியது எனவும் தெரிவித்துள்ளார். ஊழல் தவறான நிர்வாகம் பிழையான முன்னுரிமைகள் ஆகியன இலங்கையின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் தமிழ் மக்களின் நிறைவேற்றப்படாத கோரிக்கைகளிற்கு மத்தியில் பல வருடங்களாக இடம் பெற்ற மோதல்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை சீர்குலைத்துள்ளன எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

30 வருடங்களாக நீடித்த யுத்தத்திற்கு தமிழ்மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளே காரணம் யுத்தத்திற்காக மிகப் பெருமளவு பணம் செலவிடப்பட்டது என தெரிவித்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் யுத்தம் இடம்பெறாவிட்டால் நாட்டின் பொருளாதார நிலை இந்தளவிற்கு பாதிக்கப்பட்டிராது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சுயநிர்ணய உரிமைக்கான தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கைக்கு தீர்வை காண்பது இலங்கை தன்னை பற்றி சர்வதேச அளவில் புதிய தோற்றப்பாட்டை காண்பிப்பதற்கு உதவும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அனைத்து மக்களும் தங்கள் இறைமையை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கும் அரசமைப்பின் மூலம் அனைத்து சமூகத்தினரும் இணைந்து பாடுபட்டு நாட்டை கட்டியெழுப்பலாம் நாங்கள் ஐக்கியப்பட்டுள்ளோம் என்பதை காண்பிக்கலாம் என தெரிவித்துள்ள சம்பந்தன் மோதலிற்கு தீர்வை காணாமல் எவ்வாறு பொருளாதார முன்னேற்றம் சாத்தியம் என்பது எனக்கு தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டுப் பெண்ணை ஆச்சரியம் அடைய வைத்த இலங்கை இளைஞன்

இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டிருந்த வெளி நாட்டுப் பெண் ஒருவர் இலங்கையரின் செயலைக் கண்டு வியப்படைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தனது குடும்பத்தினருடன் இலங்கைக்கு சுற்றுலா வந்த பெண் கண்டி நகருக்கு பொதுப் போக்குவரத்து சேவைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றில் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அங்கு தனது பையை பேருந்தில் மறந்து விட்டு இறங்கி சென்று ள்ளனர். பேருந்தும் சற்றுத் தூரம் சென்ற போது தான் பை தவற விட்டதை குறித்த பெண் உணர்ந்துள்ளார்.

தவற விட்ட பைக்குள் 1000 டொலர், கையடக்க தொலை பேசி, ஐபேட் கடவுச்சீட்டு உள்ளிட்ட முக்கியமான பொருட்கள் காணப்பட்டுள்ளன.

நடுவீதியில் என்ன செய்வதெனத் தெரியாமல் பேருந்தை துரத்திச் செல்வதற்கு முச்சக்கர வண்டி ஒன்றை தேடிய போதிலும் கண்டு பிடிக்க முடியாமல் போயுள்ளது.

எனினும் ஓரிரு நிமிடங்களில் இளைஞன் ஒருவர் பை ஒன்றுடன் ஓடி வருவதை அவதானித்தோம். அந்த இளைஞன் எங்களைத் தேடியே வந்தார். எங்களிடம் பையை ஒப்படைத்தார். எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. எனது பெற்றோர் அவருக்கு பணம் கொடுத்தனர். எனினும் அவை எல்லாம் தேவை யில்லை என அவர் தெரிவித்தார்.

எங்கள் பையைக் கொண்டு வர பேருந்தில் இருந்து இறங்கியமையால் அந்த இளைஞனை பேருந்து விட்டுச் சென்றுவிட்டது.

பின்னர் அவர் அடுத்த பேருந்திற்காக காத்திருந்த நிலையில் எனது பெற்றோர் அவரை சாப்பிட வருமாறு அழைத்த போதும் அதற்கு மறுத்து விட்டார்.

அவரை பார்ப்பதற்கு மிகவும் ஏழ்மையாக இருந்தார். ஆங்கிலம் பெரிதாகத் தெரியவில்லை. எனினும் பொது போக்குவரத்து சேவையில் யார் வேண்டும் என்றாலும் திருடி யிருக்கலாம்.

எனினும் அப்படிச் செய்யாமல் நடந்து கொண்டதைப் பார்த்து வியந்து விட்டோம். எனது பெற்றோர் மிகவும் ஆச்சரியமடைந்தனர்.

இப்படியும் மக்களா என்ற வியப்பை ஏற்படுத்தியது. இலங்கை மிகவும் அழகானது என அந்தப் பெண் தனது நாட்டின் ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# "கோட்டா கோ கம"வில் என்ன நடக்கிறது?

## மனம் திறக்கின்றனர் செயற்பாட்டாளர்கள்



சமூக செயற்பாட்டாளர்களான அஞ்சலி வந்துரகல மற்றும் மெலனி குணதிலக்க ஆகியோர் அரகலய புறநகர் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் அங்கமாக இருந்து வருகின்றனர்.

அவர்கள் ஒவ்வொரு நாளும் காலி முகத்திடலில் உள்ள கோட்டா கோ கமவில் இருக்கிறார்கள். நிலைமையைக் கண்காணித்து தேவைப்படும் போது கை கொடுக்கிறார்கள்.

அஞ்சலிக்கு 22 வயது. பொருளாதாரம் படித்து வருகிறார். 35 வயதான மெலனி, நிலைத்தன்மை துறையில் பணிபுரியும் காலநிலை ஆர்வலர். அரகலயாளன்றால் என்ன அது இதுவரை என்ன சாதித் துள்ளது.

அது எங்கு செல்கிறது மற்றும் அவர்களின் செயல்பாடு குறித்து அவர்களது குடும்பத்தினர் என்ன நினைக் கிறார்கள் என்று அவர்கள் இருவரும் பேசினர்.

ஜனாதிபதி ராஜபக்ஷ தனது பதவிக் காலத்தை முடிப்பதாகக் கூறியிருக் கிறார். நீங்கள் என்ன செய்வீர்கள்?

அவர் போகும் வரை பொறுத்திருப்பதில் உறுதியாக இருக்கிறோம். மகிந்த போக மாட்டேன் என்றார் ஆனால் சென்றார். தோல்வியுற்ற ஜனாதிபதியாக இருந்து வெளியேற முடியாது என்று ஜனாதிபதி கூறுகிறார். ஆனால் ஒரு வயதான மனிதனின் ஈகோ திருப்தி அடைவதால் தலைமுறைகள் தங்கள் வாழ்க்கையை வீணடிக்க வேண்டுமா? மக்கள் வரிசையில் நின்று மருந்து கிடைக்காமல் இறக்கின்றனர். ஒரு தலைவர் தனது மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டும்.

அரகலய இதுவரை என்ன சாதித்தது என்று நினைக்கிறீர்கள்?

நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தியது மிகப்பெரிய அம்சம். அவர்கள் வாழ்நாள் முழுவதும் போராடியதை. நாங்கள் சாதித்து விட்டோம் என்று வயதானவர்கள் சொல்கிறார்கள். அனைத்து மதத்தினரின் பண்டிகை களையும் ஒற்றுமையுடன் கொண்டாடினோம். ஊழல் தலைவர்கள் பயம் மற்றும் வேறுபாடுகளைப் பயன்படுத்தி எங்களைப் பிரித்து வைத்திருப்பதை மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

ஆனால் எந்த வேறுபாடுகளையும் தாண்டி நாம் ஒன்றுபடலாம். வக்கீல்கள் மக்களின் உரிமைகளை பாதுகாக்க முன் வருகிறார்கள். மத்தியவங்கி பணம் அச்சிடுவதை நிறுத்தி விட்டு புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டார். கோட்டா கோ கமவின் அழுத்தம் காரணமாக அடாவடியில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநீதிக்கு எதிராக போராடும் சக்தி தங்களுக்கு இருப்பதை மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். வடக்கில் இருந்து முழுமையான பங்கேற்பு இல்லாவிட்டாலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் தோட்டத்தொழிலாளர்களும் எம்முடன் இணைந் துள்ளனர். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முதன்முறையாக கொழும்பில் நடைபெற்றது. யார் வேண்டுமானாலும் இங்கு வந்து தங்கள் கவலைகளை தெரிவிக்கலாம்.

முன்னதாக, பொதுமக்கள் இந்த பிரச்சினைகளை குறுகிய கண்ணோட்டத்தில் பார்த்தார்கள். ஆனால் இப்போது சமூக ஊடகங்களில், பலவிதமான பார்வைகள் வெளிவருகின்றன.

நாங்கள் புரிந்து கொள்ளவும், பச்சாதாபம் கொள்ளவும், பதில்களைக் கண்டறியவும் விரும்புகிறோம். கருத்துகளை மாற்ற இடம் உள்ளது. கல்வி மற்றும் விழிப்புணர்வு நடக்கிறது.

எதிர்ப்புகளை நீண்ட காலத்திற்கு எப்படித் தாங்குவது?

முன்பு பெரும் கூட்டம் இருந்தது. ஆனால் எந்தச் செயலிலும் வளர்ச்சியும் முட்டுக்கட்டையும் உள்ளது. மே 9 க்குப் பிறகு ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டது. ஏனெனில் மக்கள் அச்சமடைந்தனர்.அதுவரை இது பாதுகாப்பான இடமாக இருந்தது. இது அனைவருக்கும் ஒரு அதிர்ச்சிகரமான நிகழ்வு. எங்களுக்கு ஒரு தண்ணீர் போத்தல் நன்கொடையாக வழங்கிய ஒருவர் கூட அதை உணர்ந்தார். பயம் அவர்களின் ஆயுதம். அனைத்து தரப்பிலிருந்தும் அரசாங்கம் அழுத்தம் கொடுத்து வருகிறது. மேலும் மக்கள் வேலைக்குச் சென்று வாழ்க்கையை நடத்த வேண்டியுள்ளது. அவர்களிடம் பணம் இல்லை, போக்குவரத்து வசதி இல்லை. நேரடியாக இங்கு வர முடியாவிட்டாலும் பலர் எங்களுடன் தொடர்பில் உள்ளனர். வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் எங்களுக்கு என்ன தேவை என்று கேட்கிறார்கள். ஊரடங்கு உத்தரவின் போது மக்கள் உணவு மற்றும் தண்ணீரை uber மற்றும் pickme மூலம் அனுப்பினர். வன்முறையற்ற எதிர்ப்பை நம்பும் மக்களுக்கு அவர்கள் அன்பையும் அமைதியையும் தருகிறார்கள் மற்றும் அவர்களின் நிலைப்பாட்டில் நிற்கிறார்கள்.

உங்கள் வீட்டிற்கு வெளியே கருப்புக் கொடியை ஏற்றியோ அல்லது சுவரொட்டியை வைத்தோ கூட உங்கள் எதிர்ப்பைக் காட்டலாம். எதிர்ப்புகளை முடிந்த வரை அமைதியான முறையில் காட்ட சிறிய எதிர்ப்புகளுடன் போராட்டம் மீண்டும் ஒளிரலாம். எங்களுக்கு ஒரு பொதுவான, கூட்டு இலக்கு உள் ளது. அதை நிலைநிறுத்த முடியும்.

கண்ணுக்குத் தெரியும் தலைவர்கள் இல்லாமல் தொடர முடியுமா?

ஒரு தலைவரின் முகம் இல்லாமல் முன்னேற வாய்ப்பு உள்ளது. பல்வேறு குழுக்கள் அரசாங்கத்துடன் ஈடுபட்டு பத்திரிகைச் செய்திகளை வெளியிடுகின்றன. ஆனால் அவை அரகலயத்தைச் சேர்ந்தவை அல்ல. எங்களிடம் எங்கள் முக்கிய மதிப்புகள் மற்றும் கொள்கைகளின் தொகுப்பு உள்ளது. எனவே எங்களுக்கு ஒரு தலைவர் இல்லை, ஒருவர் தேவையில்லை. ஊழல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு இடமில்லாமல் நாங்கள் வன்முறையற்றவர்கள். ஒவ்வொருவரும் பொறுப்பையும் உரிமையையும் எடுத்துக் கொள்கிறார்கள். நிச்சயமாக, எங்களிடம் வெவ்வேறு தனிப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் கருத்தியல் ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்கான பொதுவான இலக்கை ஆதரிக்கின்றனர்.

போதைப்பொருள் பயன்பாடு, பாலியல் செயல்பாடு மற்றும் ஒற்றுமையின்மை பற்றிய அறிக்கைகள் உள்ளன. அவை சரிதானா?

இயக்கத்தை இழிவுபடுத்தவும் கலைக்கவும் பல முயற்சிகள் உள்ளன. இந்தக் கதைகள் ஆரம்பத்திலிருந்தே உண்டு. அரகலயவையும் அங்குள்ள போராட்டக்காரர்களையும் பேய்த்தனமாகப் பார்ப்பதற்குப் பதிலாக, நம் சமூகத்தில் இருக்கும் பெரிய சமூக மற்றும் கலாச்சாரப் பிரச்சினைகளுக்கு மக்கள் தீர்வு காண வேண்டும்.

போராட்டக்காரர்களின் நலனைக் காண பிரதமர் ஒரு குழுவை நியமித்தார். இது நடந்ததா?

யாரும் எங்களுக்கு உதவவில்லை. ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புவது இலக்கு அல்ல என்பதை காட்டி எம்மை நடுநிலையாக்கும் முயற்சியே இது. இவை இயக்கத்தை நீர்த்துப் போகச் செய்யும் சூழ்ச்சிகள். ஆனால் நாம் அதை விட மிகவும் வலிமையானவர்கள். இவ்வளவு நாள் மௌனமாக இருந்து அலுத்து விட்டோம். பிரச்னைகள் தீர்க்கப்படாததால் வெளியில் வருவோம்.

மக்களுக்கு மீண்டும் அடிப்படை தேவைகள் நிறைவு செய்யப்பட்டால், அவர்கள் மாற்றத்தை மறந்து விடுவார்களா?

உயர் நடுத்தர மற்றும் நகர மக்கள் தங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யவில்லை, ஆனால் குறைந்த சலுகை பெற்ற சமூகங்கள் நீண்ட காலமாக எரிவாயு சிலிண்டர் வாங்க முடியாததால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சமூகத்தின் ஒரு பகுதியினர் விரும்பியதைப் பெற்றாலும், எங்கள் இயக்கம் அழியாது, ஏனென்றால் நாங்கள் ஒரு பெரிய நோக்கத்திற்காக போராடுகிறோம். எந்தவொரு குறுகிய கால தீர்வுகளும் நிலையானவை அல்ல.

நம் அனைவருக்கும் வீடுகள் மற்றும் வேலைகள் உள்ளன, அங்கு நாம் உரையாடலாம் மற்றும் நாம் தொடர்பு கொள்ளும் நபர்களை பாதிக்கலாம். வசதி படைத்தவர்கள் கூட வெளியே வந்து உதவுகிறார்கள் பல்கலைக்கழக இடைவேளையில் இருந்து வீடு திரும்பிய மாணவர்கள் மற்றும் வெளிநாட்டில் உள்ள இலங்கை மாணவர்கள் எங்களுடன் இணைந்துள்ளனர்.

அரசியல் கட்சியாக மாறுவீர்களா?


ஒரு அரசியல் கட்சியை விட சுறுசுறுப்பான குடிமக்கள் மிகப்பெரிய பங்கை வகிக்க முடியும். தற்போதுள்ள கட்சிகள் தங்களுக்குள் அதிகாரத்தை மாற்றிக் கொள்கின்றன. நெருக்கடியான காலங்களில் பொதுமக்கள் மீண்டும் மீண்டும் ஒன்றிணைந்துள்ளனர்.

முறையான கொள்கைகளைக் கொண்ட திறமையுள்ள சரியான நபர்கள் தேவை. நாங்கள் விரும்புவது வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் அமைப்பு மற்றும் சிறப்பு சலுகைகள் பெறாத குற்ற வரலாறு இல்லாத தலைவர்கள். அரசியலமைப்பின் மூலம் மாற்றத்தையும் நீதியையும் நாங்கள் விரும்புகிறோம்.

அரகலயக்குள் ஜே.வி.பி ஊடுருவியதா?

அரசியல் கட்சிகள் இங்கு இல்லை. ஆனால் ஆரம்பத்தில் இருந்தே இடது சாரி அரசியல் கட்சிகளுடன் இணைந்த மாணவர் குழுக்கள் உள்ளன. அவர்கள் கருத்தியல் வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர். ஆனால் சமூக அநீதி மற்றும் ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்கான பொதுவான இலக்கை ஆதரிக்கின்றனர்.

முக்கியமாக அவர்களுக்கும் மற்ற சுயேச்சையான, கட்சி சார்பற்ற எதிர்ப்பாளர்களுக்கும் இடையே உள்ள கருத்தியல் வேறுபாடுகள் காரணமாக அரகலயவில் அவர்கள் ஆதிக்கம் செலுத்துவது சாத்தியமில்லை. ஊழலை ஆதரிக்கும் தற்போதைய அதிகார அரசியலை நிராகரிக்கும் குடிமக்கள் எவரும் வந்து கலந்து கொண்டு தங்கள் குரலைக் கேட்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் அரகல எந்த ஒரு மக்களுக்கும் சொந்தமானது அல்ல. (கிரவுண்ட் நியூஸ்)



# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0%** முதல் **1.5%** வரை

## அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

**416-757-0034**
**416-994-3861**



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# மீளத் திறக்கப்படும் பலாலி விமான நிலையம் இந்திய அழுத்தங்களுக்குள் இலங்கை அரசு?

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக யாழில் இருந்து
– பார்த்தீபன் –

பலாலியிலிருந்து தமிழகத்தின் இரண்டு பிரதான நகரங்களுக்கான விமான சேவைகள் எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியான ஒரு செய்தியாக இருக்கலாம்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து, பலாலி விமான நிலையத்தின் நிலை குறித்து கள ஆய்வை மேற்கொண்ட அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா இதனை அறிவித்தார். பலாலியிலிருந்து சென்னைக்கும், திருச்சிக்கும் தினசரி விமான சேவைகள் ஜீலை முதலாம் திகதி முதல் நடைபெறவிருக்கும் நிலையில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் என அழைக்கப்படும் பலாலி விமான நிலையம் திறக்கப்பட வேண்டும் என்பதிலோ அங்கிருந்து தென்னிந்தியாவுக்கான விமான சேவைகளை ஆரம்பித்தால் வடபகுதியிலுள்ள தமிழர்கள் அதிகளவுக்குப் பயன்படுவார்கள் என்பதையிட்டோ இலங்கை அரசாங்கம் ஒரு போதும் அக்கறைகாட்டியது கிடையாது. போர் முடிவுக்கு வந்த பின்னர் பயணிகளை அதிகளவுக்கு கவர்ந்திழுக்காத மத்தளையில் பல கோடி ரூபாவில் விமான நிலையம் ஒன்றை அமைத்த அரசாங்கம், பலாலியை புனரமைப்பதில் அக்கறை காட்டவில்லை.

பலாலி விமான நிலையம் புனரமைப்பு செய்யப்பட்டு, மீளத் திறக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2014 இல் இலங்கை அரசுக்கு மட்டுமன்றி இந்திய அரசுக்கும் அழுத்தம் கொடுத்தது. இந்தியப் பிரதமர் இதனை ஏற்றுக் கொண்ட நிலையில் கொழும்புடன் புதுடில்லி பேச்சுகளை 2015 இல் ஆரம்பித்தது. இதனையடுத்து பலாலி விமான நிலையத்தை மேம்படுத்துவதறகான உடன்படிக்கை ஒன்று இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. தென் பகுதியிலிருந்து இதற்கு எதிர்ப்புக்கள் கிளம்பிய போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்காக கொடுத்த அழுத்தம் காரணமாக இதனை நிறைவேற்ற வேண்டும் என்பதில் இந்தியா அக்கறையாக இருந்தது. இந்தியாவுக்கும் அதற்கான தேவை இருந்ததால் அதனைச் செய்தது.

பலாலி விமானத் தளத்திலிருந்த விமானப்படை அதிகாரிகள் கூட இந்த அபிவிருத்திப் பணிகளுக்கு அப்போது ஒத்துழைப்பை வழங்க மறுத்தனர் என்பதும் கவனிக்கத்தக்கது. உள்ளூர் தமிழ் மக்கள் இதனால் பயனடைவார்கள் என்பது தான் இதற்குக் காரணம்.

பலாலி விமான நிலையத்தை மீள ஆரம்பிப்பதில் தென்பகுதியில் அப்போது உருவான எதிர்ப்புக்களை சமாளிக்க 'நல்லாட்சி' அரசின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இரண்டு விடயங்களை அப்போது தெரிவித்தார்.


ஒன்று பலாலி சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும் அதேவேளையில் இரத்மலானை விமான நிலையமும் சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்தப்படும். இரண்டு பலாலி விமான நிலையத்திலிருந்து பிராந்திய விமான சேவைகள் மட்டுமே நடைபெறும். கட்டுநாயக்க விமான நிலையத்தின் முக்கியத்துவம் குறைந்துவிடும் எனத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையடுத்தே ரணில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் பலாலி விமான நிலையம் `யாழ்ப்பாணம் சர்வதேச










விமான நிலையம்' என்ற பெயரில் 2019 ஒக்ரோபர் 17 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. முதலாவது விமானம் அன்றைய தினம் சென்னையிலிருந்து வந்து பலாலியில் தரையிறங்கியது. சென்னை, திருச்சி என்பவற்றைத் தாண்டி ஹைதராபாத், பெங்களூரு, கொச்சின், மும்பாய் ஆகிய நகரங்களுக்கான விமான சேவைகளும் பலாலியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன. பலாலி விமான நிலையத்தின் முக்கியத்துவத்தை இது மேலும் அதிகரித்திருந்தது.

ஆனால், கொரோனா பரவல் தீவிரமடைந்த நிலையில் அதனைக் காரணம் காட்டி இதனை மூடிய இலங்கை அரசாங்கம் இதனை மீளத் திறப்பதில் அக்கறை காட்டவில்லை. தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி இதனை ஒரேயடியாக மூடி விடுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. இந்த விமான நிலையத்தின் மூலமாக யாழ்ப்பாணம் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைவதையும், தமிழகத்துடனான தொடர்புகள் வலுவடைவதையும் விரும்பாத சில அதிகாரிகளே இந்த விமான நிலையத்தை மூடி விட வேண்டும் என்பதில் அக்கறை காட்டியிருக்க வேண்டும் என தமிழ் சமூக செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

இருந்த போதிலும் இந்தியா கொடுத்த அழுத்தம் காரணமாகவே இப்போது பலாலியை மீண்டும் திறப்பதற்கு இலங்கை இணங்கியதாகத் தெரிகின்றது. இப்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியமாகவுள்ள உடனடி மனிதாபிமான உதவிகளை இந்தியாவே அதிகளவுக்கு வழங்கி வருவதால் புதுடில்லி இவ்விடயத்தில் செல்வாக்கைச் செலுத்தும் நிலையில் இருந்துள்ளது.

திருக்கேதீஸ்வர உற்சவத்தை காரணம் காட்டி, அதற்காக இந்தியாவிலிருந்து யாத்திரிகர்கள் வருவார்கள், அதன்மூலம் சுற்றுலா துறைக்கு புத்துயிரூட்டலாம் என முன்வைக்கப்பட்ட கருத்திலேயே பலாலியைத் திறப்பதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியது.

பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படையாகவுள்ள அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்கு உடனடியாக இருகக் கூடிய வழி உல்லாசப் பயணத்துறைதான். மின்சாரத் தடை, போக்குவரத்துப் பிரச்சினை, எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக அன்றாடம் வீதிகளில் இடம் பெறும் மோதல்கள் என்பன சுயமாக வரக்கூடிய உல்லாசப்பயணிகளின் வருகையைப் பெருமளவுக்குப் பாதித்திருக்கின்றது. இந்த நிலையில் பிரசித்தி பெற்ற கோவில் பைவங்களை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்படக்கூடிய பயணங்கள் ஓரளவுக்கு நம்பிக்கையளிக்கக் கூடியவையாக இருக்கலாம். பயணிகளைப் பெரமளவக்கு கவர்வதாகவும் அவை இருக்கும்.

திருக்கேதீஸ்வர கும்பாவிசேகத்தை முன்னிட்டு ஜீலை 1 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இந்திய யாத்திரீகர்கள் வருவதற்கான `விசேட கட்டண பக்கேஜ்' அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தமிழகத்திலுள்ள பிரபலமான சில பிரயாண முகவர்கள் இதனை முன்னெடுத்து வருகின்றார்கள். பலாலியிலிருந்து திருக்கேதீஸ்வரம் சென்று வருவது, தங்குமிட வசதிகள் என்பனவும் அவர்களாலேயே செய்யப்படுவதால் யாத்திரீகர்கள் நம்பிக்கையுடன் வந்து செல்லக்கூடிய நிலை உள்ளது.

இவற்றை விட இன்னொரு கவர்ச்சியான விடயமும் இதில் உள்ளது. இந்திய ரூபா ஒன்றின் பெறுமதி இப்போது 5 இலங்கை ரூபாய்களாக உயர்ந்திருக்கின்றது. அதுவும் இந்தியப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய ஒன்று தான்.

ஆனால் யாத்திரிகர்களாக வழிபாட்டுக்கென வருபவர்கள் அதிகளவு பணத்தை செலவிடுவார்கள் என எதிர்பார்க்க முடியாது என சுட்டிக் காட்டுகின்றார் பொருளாதாரத்துறை நிபுணர் ஒருவர். அவர்கள் மலிவான தங்குமிடங்களையே தேடிச் செல்வார்கள். விலை குறைவான சைவ உணவகங்களை விரும்புவார்கள். அதனால் இதன் மூலமாக அதிகளவுக்கு டொலர் உடனடியாக வரும் என எதிர் பார்க்க முடியாது. களிப்பூட்டக்கூடிய சுற்றுலா மூலமாகவே உடனடியாக அதிகளவு டொலரை சம்பாதிக்க முடியம். ஆனால், அதற்கான நிலை நாட்டில் இல்லை.

பலாலி திறக்கப்படுவதில் இன்னொரு பிரதிகூலமும் உள்ளது. `குருவிகள்' மூலமாக அதிகளவு பொருட்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரலாம். இதனைக் கட்டுப்படுத்துவது கடினம். இது மறைமுகமான ஒரு இறக்குமதியாக இருப்பதால், அந்நியச் செலாவணி அதிகளவுக்கு வெளியே செல்வதற்கு இது வழி வகுக்கும். விமானக் கட்டணமும் அதிகமாக இருப்பதால், தமிழகம் சென்று வருபவர்கள் அதனை ஈடு கட்டக்கூடிய வகையில் அதிகளவு பொருட்களைக் கொண்டு வர முற்படுவார்கள். ஆக, உடனடியாக இதன் மூலம் அந்நியச் செலாவணி அதிகளவுக்கு உள்ளே வரும் என எதிர்பார்க்க முடியாது.

இருந்த போதிலும் புலம் பெயர்ந்த தமிழர்கள் அடுத்துவரும் மாதங்களில் அதிகளவுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படும் நிலையில், பலாலி திறக்கப்படுவது ஒரு திருப்புமுனையாக அமையலாம்.

கட்டுநாயக்காவில் வந்து இறங்கும் ஒருவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்வதற்கு இப்போது சுமார் 50 ஆயிரம் ரூபாவை வாகனத்துக்குக் கொடுக்க வேண்டியுள்ளது. அவர்கள் சென்னைக்கு `ட்ரான்ஸிற்'றில் வந்து பலாலி வர முடியுமானால் சுமார் ஒரு லட்சம் ரூபாவை அவர்களால் சேமிக்க முடியும். தற்போதைய நிலையில் இது போக்குவரத்துச் சிக்கல்களையும் குறைக்கும் என்பதால், தயங்கிக் கொண்டிருந்த புலம் பெயர்ந்த மக்கள் இதனால் கவரப்பட வாய்ப்புள்ளது. இதன் மூலமாகவும் கணிசமான அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பலாலி விமான நிலையம் இப்போது அவசரம் அவசரமாக திறக்கப்படுகின்றது. இதன்மூலமாகப் பெறப்படக் கூடிய பொருளாதார நலன்கள் பல உள்ளன. நேர்த்தியான ஒரு திட்டமிடல் மூலமாக இதனைச் செய்ய முடியும். தமிழர்கள் இதன் மூலமாக நலன்களைப் பெறுவார்கள் என்ற கண்ணோட்டத்துடன் அரச அதிகாரிகள் இதனைப் பார்க்காமல் செயற்பட்டால் அந்த நலன்களை பெற முடியும்.

அதேவேளையில் விமானப் போக்குவரத்தில் ஏகபோகமாக இல்லாமல், மேலும் ஒரு இரு விமான நிறுவனங்களும் இந்த சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்கினால், விமானக் கட்டணம் பெருமளவுக்கு குறையும் வாய்ப்பு உள்ளது. அதன் மூலம் பலாலியை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். வடக்கின் பொருளாதார வளர்ச்சிக்கும் அது உதவும். இந்திய அழுத்தம் காரணமாக பலாலியை திறந்த அரசு இவற்றைச் செய்யும் என எதிர்பார்க்க முடியுமா?

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி
## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

18 யூன் 2022 முதல் 24 யூன் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை சங்கரப்பிள்ளை

புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய பொறியியலாளர் திரு கனகசபை சங்கரப்பிள்ளை அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 19 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் கனகசபை சங்கரப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மராஜ் ராஜா (பத்தன்)

யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்தன் என்று அழைக்கப்படும் திரு பத்மராஜ் ராஜா அவர்களது 30வது ஆண்டு நினைவு நாள் 20 யூன் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பத்மராஜ் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு துரைச்சாமி தேவதாஸ்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு துரைச்சாமி தேவதாஸ் (முன்னாள் FORUT- FOSDOO சமூக அபிவிருத்தி அமைப்புக்களின் ஒன்றிய முகாமையாளர்) அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாள் 17 யூன் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு துரைச்சாமி தேவதாஸ் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 27வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.வைமன் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களது 27வது ஆண்டு நினைவுநாள் 16 யூன் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக 18 யூன் 2022 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத் தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## ஸ்ரோவில் முதியோர் சங்கம்
## Stouffville Golden Years Club
## விடுக்கும் அறிவித்தல்

ஸ்ரோவில் முதியோர் சங்கம் (**Stouffville Golden Years Club**) அயல் முதியோர் சங்கங்களையும் இணைத்து நடாத்தும் முதியவர்களின் வருடாந்த கோடைகால ஒன்றுகூடல்

காலம்: ஞாயிற்றுக்கிழமை – 26-06-2022

**Sunday - June 26. 2022**

இடம்: **Milliken Park – Picnic Area A (McCowan & Steeles)**

காலை 10.00 மணி தொடக்கம்

வழமை போன்று காலை உணவு: தோசை, மதிய உணவு: பிரியாணி மற்றும் சிற்றுண்டி வகைகள், குளிர்பான வகைகள், தேனீர் ஆகியன பரிமாறப்படும்.

அங்கத்தவர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், ஆதரவாளர்கள் அனைவரையும் குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

நன்றி

தொடர்புகளுக்கு:
சுந்தரலிங்கம் 416-454-6360
தேவா சோமசுந்தரம் (தலைவர்) 416-708-6250
டேவிட் 647-205-4265

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



17 யூலை 2021 செவ்வாய்க்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் FORUT- FOSDOO சமூக அபிவிருத்தி அமைப்புக்களின் ஒன்றிய முகாமையாளர் திரு துரைச்சாமி தேவதாஸ் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



16 யூன் 2022 வியாழக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.வைமன் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களது 27வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 18 யூன் 2022 சனிக்கிழமை அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



19 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமை புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய பொறியியலாளர் திரு சங்கரப்பிள்ளை கனகசபை அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



19 யூன் 2022 ஞாயிற்றுக் கனடாவில் வசிக்கும் செல்வன் மதுசன் சுதாகரன் செல்வி செந்தாரி ஸ்ரீமோகன் ஆகியோரின் திருமண இணைவு நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கியும் இனிப்பு வகைகள், பழ வகைகள், ஐஸ்கிறீம் வழங்கியும் மகிழ்ந்தார்கள்.



19 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் மதுசன் சுதாகரன் செல்வி செந்தாரி ஸ்ரீமோகன் ஆகியோரின் திருமண இணைவு நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கியும் இனிப்பு வகைகள், பழ வகைகள், ஐஸ்கிறீம் வழங்கியும் மகிழ்ந்தார்கள்.



19 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் மதுசன் சுதாகரன் செல்வி செந்தாரி ஸ்ரீமோகன் ஆகியோரின் திருமண இணைவு நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கியும் இனிப்பு வகைகள், பழ வகைகள், ஐஸ்கிறீம் வழங்கியும் மகிழ்ந்தார்கள்.




19 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



20 யூன் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி செல்லத்துரை தில்லைநாயகி அவர்களது 80வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி செல்லத்துரை தில்லைநாயகி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



20 யூன் 2022 திங்கட்கிழமை யாழ்.உடுவிலைச் சேர்ந்த திரு பத்மராஜ் ராஜா (பத்தன்) அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



24 யூன் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்ஷினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிருஷன் கோணேஸ்வரனின் 22வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிருஷன் தனது பெற்றோர்கள் சகோதரியுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



14 யூன் 2022 செவ்வாய்க்கிழமை பிரம்டன் கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஜோசப் நந்தினி குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்

## 80வது பிறந்தநாள் வாழ்த்து



### திருமதி செல்லத்துரை தில்லைநாயகி

20 யூன் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி செல்லத்துஜர தில்லை நாயகி அவர்களது 80வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி செல்லத்துரை தில்லைநாயகி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

அகவை 80 காணும் திருமதி செல்லத்துரை தில்லைநாயகி அவர் கள் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென அன்பு இல்லக் குழந்தை களும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள்

## 4வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் அபிராம் ரானா

28 யூன் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரானா வினோதினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அபிராமின் நான்காவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அபிராம் தமது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார்.

அகவை நான்கு காணும் செல்வன் அபிராம் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் தமிழ் மகனாக வாழ வேண்டுமென அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார் கள்

# வீடு மற்றும் வாகன காப்புறுதி
# HOME & AUTO INSURANCE

வீடு — HOME
வாகனம் — AUTO
மோட்டர் சைக்கிள் — MOTOR CYCLE
படகு — BOAT
கனரக வாகனம் — TRAILER

## காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
**THUSHANTHAN RAVINDRAN**
**647-401-2653**



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


உ

ஓம் சக்தி

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## சுபகிருது வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

விரவிநின்றொளிரும் வீரமும் துணிவும் மேதினி வாழ்பவர்க் கருளி
பறந்திடு விமானம் பதிந்து பின் இறங்கி பாங்குடன் ஏறிடும் வகையில்
தரைவழி கொண்ட மிசிசாகா பதியில் தான் நிலைத் தெம் மனம் கொள்ளும்
செருக்கழித்தாண்டு சீரருள்புரியும் ஜெயதுர்க்கை அம்பிகைத் தாயே.



**கொடியேற்றம்**
26-06-2022
ஞாயிறு

**மஞ்சம்**
05-07-2022
செவ்வாய்

**சப்பறம்**
08-07-2022
வெள்ளி

**தேர்**
09-07-2022
சனி

**தீர்த்தம்**
10-07-2022
ஞாயிறு

**பூங்காவனம்**
12-07-2022
செவ்வாய்

**அம்பிகை அடியார்களே!**

சகல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற கனடா நன்நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஒன்ராரியோ மாநில மிசிசாகா மாநகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்தருளும் ஜெயதுர்க்கா அம்பாளுக்கு மகோற்சவம் நிகழ திருவருள்கூடியுள்ளது. சுபகிருது வருடம் ஆனித் திங்கள் 12ம் நாள் (26-06-2022) கார்த்திகை நட்சத்திரமும், சித்த யோகமும் கூடியுள்ள நன்நாள் ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 26ம் நாள் (10-07-2022) ஞாயிறன்று தீர்த்த உற்சவத்துடன் 15 தினங்கள் திருவிழாக்கள் கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் பகலும் இரவும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து அம்பாள் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6**
Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.com

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • info@sasilaw.ca • www.sasilaw.ca




Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி
கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி
ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth



TAX CENTRIC

**2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1**

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph



- ❑ Personal Tax
- ❑ Corporate Tax
- ❑ Book Keeping & Accounting
- ❑ Payroll Services
- ❑ GST/HST Filing
- ❑ Corporate Services
- ❑ Business Startup
- ❑ Financial Planning

## Gayatiri Thavan
Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**

# குருந்தூர் மலையும் காலிமுகத்திடலும்

நாட்டில் பொருளாதார நெருக்கடி என்ற ஒன்று உண்டா என்று ஐயப்படும் அளவுக்கு திருவிழாக்களும் கொண்டாட்டங்களும் விமரிசையாக நடக்கின்றன. ஆயிரக்கணக்கானவர்கள் திருவிழாக்களில் கூடுகிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் கொண்டாட்டங்களில் கூடுகிறார்கள். வல்லிபுர ஆழ்வார் கோவில், பாசையூர் அந்தோணியார் கோவில், வற்றாப்பளை அம்மன் கோயில் போன்றவற்றில் திருவிழாக்கள் அமோகமாக நடந்தன. இக்கட்டுரை எழுதப்படும் நாளில் கண்டியில் கிரிக்கெட் கொண்டாட்டம் நடந்து கொண்டிருக்கிறது. திருவிழாக்கள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் சனங்கள் அணியும் ஆடைகள்,எடுப்புச் சாய்ப்பு எதிலுமே பொருளாதார நெருக்கடியைக் காணமுடியவில்லை.

ஆனால் யாழ் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவர் கூறினார் 12 மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பில் 11 பேருக்கு உணவுத் தட்டுப்பாடு இருப்பதாக. அவர்கள் ஒரு வேளை அல்லது இரு வேளை உணவையே உட்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இம்மாணவர்கள் பெருமளவுக்கு கிழக்கு, மலையகம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் சொன்னார்.எனவே மாணவர்களுக்கு உணவு கொடுக்கும் விதத்தில் கொம்யூனிட்டி கிச்சின்களை உருவாக்கியிருப்பதாகவும்அவர் தெரிவித்தார்.

அவ்வாறான சமூகப்பொதுச் சமையலறைகளை குறித்து ஏற்கனவே மனோ கணேசன் பேசி வருகிறார். நகர்ப்புறத் தொடர்மாடிக் குடியிருப்பாளர்களுக்கு அவ்வாறு பொதுச் சமையல் அறைகளை உருவாக்க வேண்டும் என்று அவர் கேட்டிருந்தார். கடந்தகிழமை அக்கரைப்பற்றில் அவ்வாறான முயற்சிகளை சில முஸ்லீம் நண்பர்கள் முன்னெடுத்திருக்கிறார்கள். வீட்டிலிருந்து ஒரு பார்சல் என்ற பெயரில் அது மருதமுனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, கல்முனைக்குடி, பாலமுனை போன்ற கிராமங்களுக்கு வேகமாகப் பரவுவதாகக் கூறப்படுகிறது.


அதாவது சமூகப் பொதுச் சமையலறை மூலம் உணவு ஊட்டப்பட வேண்டிய ஒரு தொகுதியினர் உருவாகி வருகிறார்கள் என்று பொருள். இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்க முன்பிருந்ததை விடவும் நிலைமை பாரதூரமானதாக மாறி வருகிறது என்று பொருள். அவர் பதவியேற்க முன்பிருந்ததை விடவும் இப்பொழுது எரிபொருளுக்கான வரிசைகள் அதிகரித்த அளவிலும் மிக நீண்டவைகளாகக் காணப்படுகின்றன.

கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை எரிபொருளுக்காக யாழ்ப்பாணத்தில் பல கிலோ மீட்டர் நீளமான வரிசைகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்தின் நவீன வரலாற்றில் இவ்வாறான மிக நீண்ட வரிசைகள் காணப்பட்ட ஒரு நாள் அது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சிலர் சைக்கிள்களை வாடகைக்கு எடுத்து அதில் வேலைக்கு வருகிறார்கள். ஒரு நாளைக்கு சைக்கிள் வாடகை 150 ரூபாய்.

ஆனால் நாட்டின் பிரதமரும் அமைச்சர்களும் குறிசொல்வோராக மாறி விடடார்கள் என்று கடந்த வியாழக்கிழமை ஐலன்ட் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் விமர்சித்திருந்தது. பிரதமர்,அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எனைய அரசியல்வாதிகளை, அந்த ஆசிரியர் தலையங்கம் ஞானா அக்காவின் மச்சான்கள் என்று வர்ணித்திருந்தது.

அதாவது கோட்டா கோகம,மைனா கோகம,ஹிரு கோ கம போன்ற போராட்ட கிராமங்கள் உருவாக்கப்படுவதற்கு காரணமாக இருந்த பொருளாதார நெருக்கடிகளை இப்பொழுது மேலும் தீவிரமாகியிருக்கின்றன. இப்படிப் பார்த்தால் இப்பொழுது தான் போராட்டமும் அதிகரிக்க வேண்டும். ஒன்றல்ல பல கிராமங்களை நாடு முழுவதும் உருவாக்க வேண்டும். ஆனால் இருக்கின்ற கோட்டா கோகம கிராமமும் தற்பொழுது சோர்ந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்பு ஒவ்வொரு நாளும் பிற்பகலில் அக்கிராமத்தை நோக்கி ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு வந்தார்கள்.




இப்பொழுது அவ்வாறான திரட்சி காணப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. ரணில் விக்ரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்பட்ட பின் நிகழ்ந்த மாற்றங்களில் அதுவும் ஒன்று. போராட்டக் கிராமங்கள் சோரத் தொடங்கி விட்டன என்பது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச்செயலர் குமார் குணரட்னம் அதை ஏற்றுக் கொண்டார். கோட்டா கோகம கிராமத்தில் வினைத்திறனோடு செயற்படும் பல்வேறு அமைப்புக்கள் மத்தியில் முன்னிலை சோசலிசக் கட்சியின் மாணவர் அமைப்பும் காணப்படுகிறது. போராட்டத்தில் எழுச்சியும் வீழ்ச்சியும் உண்டு என்று குமார் குணரட்னம் கூறுகிறார்.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் சோரத் தொடங்கியதற்கு பல்வேறு காரணங்களைக் கூறலாம். அவற்றுள் முக்கியமானவை வருமாறு.

முதலாவது காரணம் ரணில் விக்கிரமசிங்கவின் வருகை. அவர் பிரதமராக நியமிக்கப்பட்டதோடு நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் ஒப்பீட்டளவில் நம்பிக்கைகள் அதிகரித்துள்ளன. தென்னிலங்கையில் படித்த நகர்ப்புற நடுத்தர வர்க்கம் எனப்படுவது பெருமளவுக்கு யு.என்.பிக்கு ஆதரவானது.அதில் ஒரு சிறு பகுதி ஜேவிபியினால் ஈர்க்கப்படுகிறது. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டக் கிராமங்களுக்கு மேற்படி நகர்ப்புற படித்த,நடுத்தர வர்க்கத்தின் ஆசீர்வாதம் அதிகளவு உண்டு என்று குமார் குணரட்னம் கூறுகிறார். ரணில் பிரதமராக நியமிக்கப்பட்ட பின் மேற்படி நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் போராட்டத்துக்கான உத்வேகம் குறைந்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம்.அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை ஒருங்கிணைத்து தலைமை தாங்கவல்ல பலமான கட்டமைப்புக்கள் எவையும் அங்கே கிடையாது. ஒரு சித்தாந்த அடித்தளத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட அமைப்போ கட்சியோ அங்கு இல்லை. போராட்டக்களத்தில் காணப்படும் அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட செயற்பாட்டாளர்கள் தங்களுக்கிடையே இறுக்கம் குறைந்த இணைப்புகளை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். அரசாங்கத்துக்கு எதிரானவர்கள் என்ற ஒரு ஒற்றைப் புள்ளியில் அவர்கள் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் அந்தப் பிணைப்பு மேலிருந்து கீழ்நோக்கிய ஒரு மையத்திலிருந்து நிர்வகிக்கப்படுகின்ற, ஒரு தலைமைத்துவத்துக்கு கீழ்ப்பட்ட பிணைப்பு அல்ல. மாறாக பக்கவாட்டில் ஒருவர் மற்றவரோடு கொள்ளும் சுயாதீனமான பிணைப்புக்கள். இவ்வாறு பலமான தலைமைத்துவமோ அல்லது பலமான நிறுவனக் கட்டமைப்போ இல்லாத ஒரு பின்னணியில் இது போன்ற போராட்டங்கள் காலப்போக்கில் சோர்ந்து போகும் ஆபத்து உண்டு. இது இரண்டாவது காரணம்.

மூன்றாவது காரணம். சனங்கள் நெருக்கடிகளுக்கு இசைவாக்கம் அடைந்து வருவது. நெருக்கடியின் தொடக்க காலத்தில் அவர்களுக்கு அது பாரதூரமாகத் தெரிந்தது. ஆனால் இப்பொழுது அது அவர்களுக்கு பழக்கப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது. இயல்பின்மையே இயல்பானதாக மாறி விட்டது. இதுதான் யுத்த காலத்தில் தமிழ் மக்களுக்கும் நடந்தது. ஏன் ஆயுத மோதல்களுக்கு பின்னரான காலங்களிலும் அதுதானே நிலைமை? அந்தக் கூட்டு அனுபவம்தான் பின் வந்த வைரஸ் பிரச்சினை, இப்பொழுதுள்ள பொருளாதாரப் பிரச்சனை போன்றவற்றை தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பொழுதும் அவர்களுக்கு உதவுகின்றது. இப்பொழுது தமிழ் மக்களைப் போலவே சிங்கள மக்களும் நெருக்கடிகளுக்கு பழக்கப்பட்டு வருகிறார்களா? அதனால் தான் போராட்டத்தின் தீவிரம் குறைந்து வருகிறதா?

நாலாவது காரணம், மக்கள் எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமாக நீண்ட நேரம் மிக நீண்ட வரிசைகளில் காத்துக் கிடக்கிறார்கள். தமது வயிற்றுப்பாட்டுக்காக இவ்வாறு நீண்டநேரம் காத்திருப்பதால் அவர்களுக்கு போராடுவதற்கு நேரம் குறைவாகவே கிடைக்கிறது.

ஐந்தாவது காரணம், எரிபொருள் விலை உயர்வினால் போக்குவரத்து ஒரு பிரச்சினையாக மாறியிருப்பது. நாட்டின் ஏனைய பாகங்களில் இருந்து காலிமுகத்திடலை நோக்கிப் பயணம் செய்வதற்குப் பெருந்தொகை பணத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது. இதுவும் ஒரு காரணம்.



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

மேற்கண்ட காரணங்களின் தொகுக்கப்பட்ட விளைவாக போராட்ட கிராமங்களில் ஒருவித தொய்வு ஏற்பட்டிருக்கிறது. போராட்டங்களின் விளைவாக மஹிந்த வெளியேறி விட்டார். பஸில் வெளியேறி விட்டார். இது போராடும் தரப்புக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளிக்க வேண்டும். மஹிந்தவையும் பசிலையும் அகற்றியது போல கோட்டா பயவையும் அகற்றலாம் என்ற நம்பிக்கை இப்பொழுதுதான் அதிகரிக்க வேண்டும். ஆனால் நிலைமை அப்படியாகத் தெரியவில்லை.

எனினும் போக்குவரத்துச் செலவு காரணமாக காலிமுகத்திடலில் கூடுவோரின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைந்திருந்தாலும், சிறிய பரவலான ஆர்ப்பாட்டங்கள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. மக்கள் தாங்கள் வாழும் இடங்களில் ஆங்காங்கே சிறியளவில் எதிர்ப்புகளை அவ்வப்போது காட்டி வருவதாக கோட்டா கோகம கிராமத்தை சேர்ந்தவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அதாவது ஒரு மையமான இடத்தில் பெருந்தொகையானவர்கள் கூடுவதற்கு பதிலாக சிதறலாக பரவலாக சிறிய அளவில் எதிர்ப்புக்கள் காட்டப்படுவதாக அவர்கள் கூறுகிறார்கள். கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த குமார் குணரட்னம் தமிழ் பகுதிகளில் இருந்து

(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தமிழகத்தை திணற வைக்கும் ஆளுநர் - ஆதீனம் - ஆன்மீகம்

கட்டுரையாளர்:- தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

திராவிட முறைமை அரசியல் நடைபெற்று வரும் தமிழக மண்ணில் இந்துத்துவா அரசியலை மத்திய ஆளும் கட்சியின் ஆசியுடன் தமிழக ஆளுநர், மதுரை ஆதீனம், தமிழக பா.ஜ.க. உள்ளிட்ட தரப்புக்கள் திட்டமிட்டு பரப்புரை செய்து வருகிறார்கள்.

இது மதசார்பற்ற அரசான தி.மு.க.விற்கு எதிரான அரசியல் என்றாலும், திராவிட கொள்கையை வடிவமைத்து, ஆட்சி செய்து வரும் கட்சி, பகுத்தறிவுக் கொள்கையில் உள்ள கட்சி,என்பதால் தக்க பதிலடியை தி.மு.க. வழங்குகின்றது.

மதுரை ஆதீனம், ஆன்மீக எல்லையைக் கடந்து, தமிழ் மொழிக்கான சேவையை கடந்து, இந்து மத அரசியல் தமிழக மண்ணில் தழைத்தோங்க வேண்டும் என்பதற்காக, திராவிட முறைமை அரசிற்கு எதிரான கருத்துகளைத் தொடர்ந்து முழங்கி வருகிறது. மதுரை ஆதீனத்தின் கருத்துக்களின் பின்னணியில் மத்திய அரசின் மறைமுக ஆதரவு இருக்கின்றது.

எனினும், மதுரை ஆதீனம் தமிழக மண்ணில் இருந்து கருத்துக்களை வெளியிடுவதால் தமிழகத்தின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரான சேகர்பாபு ஆதீனத்திற்கு எச்சரிக்கை விடுக்கும் தொனியில் பதிலளித்திருக்கிறார். அத்துடன் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு, மற்றும் அமைதியை கெடுக்கும் வகையில் ஆதீனங்களின் கருத்துக்கள் இருந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வெளிப்படையாகவே கூறியும் உள்ளார். இவ்வாறிருக்க, மதுரை ஆதீனம் தமிழக அரசுடன் முட்டிக ்கொண்ட சில நிகழ்வுகளை இங்கு நினைவுகூர வேண்டியுள்ளது. மறைந்த முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில் இருந்த பொழுது அரசுக்கு எதிராக மதுரை ஆதீனம் கருத்துக்களை வெளியிட்டமையால் ஆத்திரமடைந்த ஜெயலலிதா, மதுரை ஆதீனத்தின் சொத்துகள் அனைத்தையும் அறநிலையத்துறை தன் வசமாக்கும் என்ற அறிவிப்பொன்றை விடுத்தார். இதனையடுத்து மதுரை ஆதீனம் 'அம்மா சரணம்' என்று ஜெயலலிதாவை நேரில் சந்தித்து சரணடைந்து, சொத்துக்களைக் காப்பாற்றிக் கொண்டது.

ஆகவே, தற்போது ஆளும் கட்சியான தி.மு.க.வுடன் மதுரை ஆதீனம் முட்டிக் கொள்வதானது மீண்டும் அவ்விதமான பாரதூரமான நிலைமையொன்றுக்கு ஆதீனம் முகங் கொடுக்கும் சூழலை ஏற்படுத்தும் ஆபத்துக்கள் இல்லாமில்லை. அதனால் தற்போது, மதுரை ஆதீனத்திற்கு ஆதரவாக பா.ஜ.க. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளது.

இதனால் சினமடைந்த திராவிட கழக தலைவரான வீரமணி சரியாக திருச்சியில் நடைபெற்ற விழா ஒன்றின் பின்னர், 'திராவிட இயக்கம் இல்லா விட்டால் ஆதீனங்கள் இல்லை. ஏனெனில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அமுல்படுத்தினால், தமிழகத்தின் எந்த ஆதீனமும் இருக்க இயலாது. சங்கராச்சாரியார் மட்டும் தான் இதிலிருந்து தப்புவார்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதனையடுத்து, தற்போது மதுரை ஆதீனம் உள்ளிட்ட ஏனைய ஆதீனங்களும் தமது கருத்துக்களை பொது வெளியில் வெளியிடுவதை வெகுவாக குறைத்துக் கொண்டுள்ளன. அத்துடன், 'கருணாநிதியை விட ஸ்டாலின் ஆபத்தானவர் என்று பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரான ஹெச். ராஜா விடுத்த முன்னெச்சரிக்கையையும் ஆதீனங்கள் கருத்தில் கொண்டிருப்பதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இதனிடையே சிதம்பரம் நடராஜர் ஆலய நிர்வாகத்தை தீட்ஷிதர்களின் பிடியிலிருந்து மீட்கவேண்டும் என்ற பக்தர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கும் தமிழக அரசு, அங்கு ஆய்வு நடத்தி வருகிறது. இதுவும் பா.ஜ.க.வின் மத ரீதியிலான அரசிற்கு தி.மு.க. அரசு எடுக்கும் பதில் நடவடிக்கையாகத் தான் கருதப்படுகின்றது.



அதே தருணத்தில் தமிழக ஆளுநராக பொறுப்பேற்றதிலிருந்து அரசுக்கு எதிரான கருத்துகளை பல மேடைகளில் ஆளுநர் ஆர். என். ரவி தொடர்ந்து தெரிவித்து வருகிறார்.

அண்மையில் விழா ஒன்றில் பங்கு பற்றி பேசிய ஆளுநர், 'வேற்றுமையில் ஒற்றுமை என்று நாட்டைப் பற்றிக் கூறுகிறோம். சனாதன தர்மமும் அதைத் தான் கூறுகிறது. இந்தியாவில் இராணுவம், பொருளாதாரம் வளர்ச்சியடைவதை போல் ஆன்மீகத்திலும் வளர்ச்சி அவசியம். ஆன்மிகத்தின் வளர்ச்சி இந்தியாவின் வளர்ச்சியாக அமையும். இந்தியாவின் தலைமைத்துவம் ஆன்மிகத்தின் மீது நம்பிக்கை கொண்டதாக இருக்க வேண்டும். ஆன்மீகத்தில் வளர சனாதன தர்மம் வழி முறையாக இருக்கும்" என குறிப்பிட்டிருக்கிறார்.

ஆளுநரின் ஆன்மீகம் என்பது அவரது உரிமை. அதில் நாம் தலையிட இயலாது. ஆனால் சட்டப்படி ஆளுநர் பதவியில் அமர்ந்து கொண்டு, சனாதன தர்மம் குறித்தும் பேசுவது அபத்தமானது. ஆனால் ஆளுநரும் ஒவ்வொரு மேடையிலும் சனாதன தர்மம் குறித்து பேசுவதும், புதிய கல்வி கொள்கை குறித்து பேசுவதும் சட்டப்படியான பதவியில் அமர்ந்திருக்கும் அவர் அரசியல்வாதி போல் பேசுவதும் தொடர்கிறது. இது குறித்து ஆட்சியில் உள்ள தி.மு.க, தன்னுடைய உச்சகட்ட எதிர்ப்பை அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறது.

அதேநேரம், பா.ஜ.க.வைப் பொறுத்த வரையில், தமிழக அரசில் நடைபெறும் சில கொள்கை விவாத கூட்டத்தில் பேசப்படும் விடயங்களை உயரதிகாரிகள் மூலமாக உடனடியாக பெற்றுக் கொள்ளும் அக்கட்சியானது மாநில தலைவரான அண்ணாமலை ஊடாக தி.மு.க.விற்கு பதிலடிகளை வழங்கி வருகின்றது.

இந்நிலையில் அண்ணாமலை மீது சாதிய ரீதியிலான வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து கைது செய்ய வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் எழுந்திருக்கிறது. இதனால் அண்மைய நாட்களில் அண்ணாமலை அடக்கி வாசிப்பதும் உணரப்பட்டுள்ளது.

தமிழக மண்ணில் பா.ஜ.க. ஆளுநர், ஆதீனம் என்று பன்முனை தாக்குதலில் இந்து மத விருப்பு மற்றும் பிற மத வெறுப்பு அரசியல் பரப்புரை தொடர்ந்தாலும், தமிழகத்தில் மத ரீதியிலான கலவரத்தை உண்டாக்க வேண்டும் என்று திட்டமிட்டு பேசினாலும், அன்பையும், அறிவையும், உயர்கல்வியை அதிகமாக பெற்றிருக்கும் தமிழக மக்கள், அறிவார்ந்த நிலையில் செயல்படும் அரசை தான் விரும்புவார்கள். இதன் காரணமாக பா.ஜ.க. உள்ளிட்ட இந்துத்துவா சக்திகள் எத்தனை முயற்சிகளை எடுத்தாலும் இந்து மத வாக்கு வங்கி உருவாகாதுள்ளது.



# புதிய அரசியல் ஒழுங்கின் தேவை

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



நாட்டில் இரண்டு விடயங்கள் தொடர்பான உரையாடல்கள் தீவிரமாக நடக்கின்றன. ஒன்று மக்கள் தரப்பில் நிகழ்வது. இது முற்று முழுதாகவே பொருளாதார நெருக்கடிகளைச் சார்ந்தது. அதாவது வாழ்க்கைப் பிரச்சினையைப் பற்றியது. உயிர்வாழ்தலைப் பற்றியது. மற்றது அரசியல் தரப்பில் நிகழ்வது. இது அரசியலமைப்புத் திருத்தம் (21 ஆவது திருத்தம்) மற்றும் எந்தப் புதிதும் இல்லாத, பயன் குறைந்த வழமையான எதிரெதிர் மனப்பாங்குடன் விவாதங்களை நடத்துவது, சலிப்பூட்டும் வகையில் வக்கிரம் நிறைந்த ஆளை ஆள் குற்றம் சாட்டுதல் எனத் தொடர்வது.

மக்கள் தினமும் ஒவ்வொரு நொடியிலும் பல வகையான நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நாளாந்த வாழ்க்கை முற்று முழுதாகவே கேள்விக்குள்ளாகியுள்ளது. எரிபொருளுக்காக மணிக் கணக்காக நாட்கணக்காகக் கூடத் தெருவிலே நிற்க வேண்டிய நிலை. உணவுப் பொருட்களுக்காக க்யூவில் நிற்க வேண்டும். எரிவாயு வைத் தேடித் திரிவது. மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு. விவசாய உள்ளீடுகளைப் பெறுவதில் சிரமம் என முடிவற்ற அலைச்சலில் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதை விட நொடிக்கு நொடி ஏறிகொண்டிருக்கும் விலை உயர்வு. இதை ஈடுகட்டக் கூடிய அளவுக்கு வருவாயில்லை. இப்படிப் பல தொடர் பிரச்சினைகள்.

இந்த நிலையில் அடுத்து வரும் நாட்களை, மாதங்களை எப்படிக் கடப்பது என்று தெரியாமல் எல்லோரும் திகைத்துப் போயிருக்கிறார்கள். பசியும் பஞ்சமும் பட்டினியும் தலைவிரிக்கத் தொடங்கியுள்ளன. பட்டினிச் சாவுகளும் பசியினால் தற்கொலை முயற்சிகளும் நிகழ்கின்றன என்று செய்திகள் வரத் தொடங்கியுள்ளன.

மருந்துகள் இல்லை என்று கையை விரிக்கும் நிலை. **clinic Patients** இன் பாடுகள் சொல்ல வேண்டியதில்லை. மருந்தில்லாமல், உரிய சிகிச்சையில்லாமல் பலரும் அவதிப்படுகிறார்கள். அவசர தேவையைத் தவிர ஏனைய சத்திர சிகிச்சைகள் எல்லாம் தள்ளிப் போடப்படுகின்றன. **anesthesia drug** இல்லை.

ஆனால், இதைப்பற்றி இந்த நிலைமை தீவிரமடைந்து வருவதைப் பற்றிய எந்தப் பிரக்ஞையுமின்றி அரசியற் தரப்பினர் உள்ளனர். செயற்படுகின்றனர். இதில் எந்தத் தரப்பும் விதிவிலக்கல்ல. அரசாங்கம் இன்னும் முறையாகவும் முழுமையாகவும் இந்த நெருக்கடிக்குத் தீர்வு காணும் முயற்சியில் இறங்கவில்லை. அப்படி இறங்கியிருந்தால் அது இப்பொழுது அதற்கான ஏற்பாடுகளைச் செய்து பொறிமுறைகளை உருவாக்கியிருக்கும்.

இப்பொழுது நடந்து கொண்டிருப்பதெல்லாம் உடனடியாக எதையாவது செய்ய வேண்டும் என்ற அளவில் மேற்கொள்ளப்படும் கடன் பெறுதல், உதவி கோருதல் போன்றவையே. இது அவசியமே. கடன் மூலமும் உதவிகளின் வழியாகவும் தான் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும். ஆனால், இப்படியே இதைத் தொடர முடியாது.

ஆனால் நிதியமைச்சர் என்ற வகையிலும் ஆட்சிப் பொறுப்பில் உள்ள பிரதமர் என்ற வகையிலும் தன்னால் முடிந்த அளவுக்கு நிதி நெருக்கடியைத் தணிப்பதிலும் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் முயற்சிகளை எடுப்பேன் என்று உறுதியளித்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. இதற்கு அவர் ஒரு படிமுறைத் திட்டத்தையும் அறிவித்திருக்கிறார். அவருடைய அறிவிப்பின்படி அடுத்த ஆண்டு சற்று முன்னேற்றமும் 2025 இல் சமநிலையடையக் கூடிய அளவிலான பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. இதைக் கேட்கும்போது மகிழ்ச்சியாகத் தான் இருக்கு. ஆனால் இதெல்லாம் எப்படிச் சாத்தியமாக்கப்படும் என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை. அது மட்டுமல்ல, இதைச் சாத்தியப்படுத்தக் கூடிய அரசியற் சூழல் உள் நாட்டிலும் வெளியிலும் நிலவுமே என்பது கேள்வியே.



அது மட்டுமல்ல, தற்போதுள்ள அரசாங்கம் கூட அந்தளவு காலத்துக்குத் தாக்குப் பிடிக்குமா என்பதும் சந்தேகமே. இதைப் பற்றி இந்திய இராஜதந்திரி ஒருவர் என்னிடம் கேட்டார்.

எவ்வளவு காலத்துக்கு ரணில் அரசாங்கம் இருக்கும்?" என. இதையும் பிரதமர் உள்ளுணர்ந்திருக்கிறார். ஆட்சி மாறினாலும் அதிரடியாக இந்தப் பொருளாதாரத் திட்டத்தை மாற்றாமல் தொடர வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருப்பதிலிருந்தே இதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால், இதையும் கடந்தே அரசும் நாட்டின் அரசியற் சக்திகளும் சிந்திக்க வேண்டும். செயற்பட வேண்டும். அதையே இன்றைய நிலை எதிர்பார்த்து நிற்கிறது. இல்லையெனில் எதிர்காலம் மிகப் பாழடைந்து விடும். அபாயக்குழியில் வீழ்ந்து விடும். அதற்குப் பின் இந்த அரசியலை யாராலும் தொடவும் முடியாது. தாக்குப் பிடிக்கவும் முடியாது.

நாடே தன்னுடைய இறைமையை இழந்து பிறர் தயவில், பிறர் ஆளுகைக்குள் சிக்குண்டு விடும். இதொன்றும் அதீதமான கற்பனையோ அளவுக்கு மிஞ்சிய எச்சரிக்கையோ இல்லை. நடைமுறையில் உருவாகப் போகும் யதார்த்தம் உண்மை. இப்போதைய பொருளாதார நெருக்கடி என்பது பிறரை வெளியாரை முற்று முழுதாகவே நம்பியிருக்க வேண்டிய நிலையில் உள்ளது என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். எந்தப் பொருளும் கையிருப்பில் இல்லை. உணவுப் பொருட்களும் சரி, எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருட்கள், விவசாய உள்ளீடுகள் அனைத்தும் அனைத்துமே.

ஆகவே அத்தனையும் இறக்குமதி செய்யப்பட்ட நிலையிலேயே அந்தந்த இடங்களுக்கு –நேரடி விநியோகத்துக்குச் செல்கின்றன. இதை விடக் கவனிக்க வேண்டியது, எதையும் இறக்குமதி செய்வதற்கான பணம் இல்லை என்பது. டொலர் இல்லாத காரணத்தினால் துறைமுகத்துக்கு வெளியே கப்பல்கள் தரித்து நிற்கின்றன. வெளியாரின் உதவிகள் மூலமாகத் தான் நாளாந்தம் ஏதோ போய்க் கொண்டிருக்கிறது.

இப்படியே எத்தனை நாளைக்கு இந்த நிலைமையில் தொடர முடியும்? அப்படியென்றால், மாற்றுப் பொருளாதாரப் பொறிமுறைகள் சமாந்தரமாக உருவாக்கப்பட வேண்டும். அந்த மாற்றுப் பொருளாதாரப் பொறிமுறைகளைத் தனியே அரசாங்கம் மட்டும் உருவாக்க முடியாது. அதில் எதிர்க்கட்சி தொடக்கம் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற அத்தனை தரப்புகளும் பங்கேற்பது அவசியம்.

இப்படிச் சொல்லும் போது இதற்காகத் தானே தேசிய அரசாங்கத்தை அமைக்கச் சொன்னோம். அதற்கு ஜனாதிபதி இணங்கவில்லையே!" என்று யாரும் பதிலளிக்கக் கூடும். இதொன்றும் புதிய சேதியுமல்ல. புதிய உண்மையுமல்ல. இலங்கை அரசியற் பாரம்பரியமே இப்படித்தான் உள்ளது.

எந்த நெருக்கடியைத் தணிப்பதற்கும் தீர்ப்பதற்கும் ஏற்ற வகையில் தேசிய ஒருமைப்பாட்டை எட்டுவதைப் பற்றி எவரும் சிந்திப்பதே இல்லை. பதிலாக எரிகின்ற வீட்டில் பிடுங்குவது மிச்சம். பிணத்திலே கழற்றுவது லாபம் என்றே ஒவ்வொரு தரப்பும் சிந்திப்பதுண்டு. இப்பொழுதும் இதுவே நடக்கிறது.

ஜனாதிபதி தேசிய அரசாங்கம் ஒன்றைப் பற்றி இன்னும் சிந்திக்கவில்லை என்பது உண்மையாக இருக்கலாம். அது தவறாகவும் இருக்கலாம். இருக்கலாம் என்று சொல்வதை விட அது தவறு? என்றே எடுத்துக் கொள்வோம். அதற்காக நாட்டையும் மக்களையும் இப்படியே அழிவில் விட்டு விடலாமா?

விரும்பியோ விரும்பாமலோ ஜனாதிபதி அமைத்துள்ள அமைச்சரவையை ஏற்றுக் கொண்டுதானே பாராளுமன்றம் இயங்குகின்றது? நாடு முழுவதிலும் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அப்படியிருக்கும்போது இதை விட்டு விலகி நின்று கொண்டு தனியே வழமையைப்போல அரசியல் எதிர்ப்பைக் காட்டிக் கொள்ளாமல் இணைந்த பொருளாதாரக் கொள்கை ஒன்றைப் பற்றி பேசவும் விவாதிக்கவும் அதன் விளைவாகத் திட்டமொன்றை உருவாக்கவும் வேண்டும். சில வேளை அரசாங்கத்தின் தரப்பில் போதாமைகளும் தவறுகளும் பலவீனங்களும் இருப்பின் அதற்குப் பதிலாக மாற்றுத் திட்டங்களையும் தீர்வுகளையும் எதிர்க்கட்சிகள் முன் வைக்கலாம். இதில் எதிர்க்கட்சிகள் தனித்தும் செயற்பட முடியும். சேர்ந்தும் செயற்பட முடியும்.

சிலவேளை அரசாங்கத்தினால் செய்ய முடியாத அதனால் உருவாக்க முடியாத ஒரு திட்டத்தை எதிர்த்தரப்பில் உள்ள எவராவது செய்யவும் கூடும். அப்படி உருவாக்கப்படும் பொருளாதாரத் திட்டத்தை அரசிடம் சமர்ப்பித்து அதை நடைமுறைப்படுத்தக் கோரலாம்.

இப்பொழுது தேவை அவசர நடவடிக்கையே. இந்த அவசர நடவடிக்கையில் அனைவருடைய பங்களிப்புமே. இதற்கான அரசியல் ஒழுங்கொன்றைப் புதிதாக நாம் உருவாக்க வேண்டும். சுய விருப்பு வெறுப்புகளை விட்டு மக்கள்நலனை முதன்மையாகக் கொண்டு செயற்பட வேண்டிய ஒழுக்கம் ஒன்று தேவை. இந்த ஒழுக்கம் ஒரு செழுமையான அரசியற் பண்பாடாக வளர்ச்சியடையுமாக இருந்தால் இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மட்டுமல்ல, எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகவுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கும் அது உதவும். அதோடு நீண்ட காலமாகவே தீர்க்கப்படாதிருக்கும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இது பயன்படும்.

ஆனால் துரதிருஷ்டவசமாக இது வரையில் எந்த அரசியற் தரப்பும் எந்த ஒரு பொருளாதாரத் திட்டத்தையும் தயாரிக்கவும் இல்லை. அதைப்பற்றிச் சிந்திக்கவும் இல்லை. பதிலாக எளிமையான முறையில் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுவதிலேயே குறியாக உள்ளன. இதனால் என்ன பயன்?

ஆகவே மக்களுடைய தேவைகள், நலன்கள், விருப்பங்களுக்கு வெளியே அவற்றுக்கு மாறாகவே இந்த அரசியற் தரப்புகள் உள்ளன. அரசாங்கமோ அமைச்சரவையை நீட்டிக்கொண்டு போகிறது. இதை விட 30 வரையான இராஜாங்க அமைச்சர்களை நியமிக்க வுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஒரு பக்கத்தில் அரசுப் பணியாளர்களையே குறைப்புச் செய்வதைப் பற்றிச் சிந்திக்கும் அரசாங்கம் அமைச்சரவையில் ஏன் அளவுக்கு அதிகமான ஆட்களின் நியமனம்? என்ற கேள்வி மக்களிடம் எழுந்துள்ளது.

நாடு இன்றிருக்கின்ற நிலையில் செலவீனங்களைக் குறைத்து வளங்களைப் பெருக்க வேண்டும். எல்லோரும் முழு அளவில் நாட்டுக்காக ஒன்று பட்டு உழைக்க வேண்டும்.

இல்லையேல் கூட்டு நெருக்கடியை அனைவரும் சந்திக்க வேண்டும். சில வேளை கூட்டு அழிவையும் கூட.


## கொழும்பில் 6 வீடுகள் விற்பனைக்கு!

கொழும்பில் சிறப்பான குடியிருப்புப் பகுதியில் ஆறு வீடுகள், தொடர்மாடிக் குடியிருப்புக்கள் விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு:-

**B.Pradeep Chandrasekera - 011647 278 2568**
**Captain_Pardeep2011@yahoo.ca**

**B.S. Chandrasekera:-**
**0773920702 / 0778613943 / 0767621801**

# உதவ மறுக்கும் உலகம்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை, இந்தப் பேரழிவில் இருந்து மீள்வதற்கு சர்வதேச உதவிகளை நாடுவதை விட வேறு வழியே இல்லை .

அதனால் தான், சர்வதேச நாணய நிதியத்துடன் பேசவே மாட்டேன் என்று கூறிக் கொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது மட்டுமன்றி, நாங்கள் ஆறு மாதங்களுக்கு முன்னரேனும் அவர்களின் உதவியைப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். 52 பில்லியன் டொலர்கள் வரை வெளி நாட்டுக் கடன்களைக் கொண்டுள்ள இலங்கையிடம், இப்போது வெளிநாட்டு நாணயக் கையிருப்பு தேய்ந்து போயிருக்கிறது. ஏற்கனவே வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. வட்டியைக் கொடுக்க முடியவில்லை. இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளைக் கூட வழங்க முடியாதிருக்கிறது. இதனால், கொழும்பு துறைமுகத்தில் கப்பல்கள் பொருட்களை இறக்காமல் காத்திருக்கும் நிலை நீடிக்கிறது.

இந்த நெருக்கடியால், இப்போது, இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு, நாடுகளும், நிறுவனங்களும் தயங்குகின்றன. `என்ன ஏது என்று கேட்காமலேயே சீனா கடன்களை வழங்குகிறது. சர்வ தேச நாணய நிதியம் போன்றன அப்படியில்லை. அவர்கள் பல கேள்விகளைக் கேட்டு, தொல்லைப் படுத்துகிறார்கள். அதனால் தான் சீனாவிடம் செல்கிறோம்' என முன்னர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது பெருமையுடன் கூறியிருந்தார்.

திட்டங்களைப் பற்றிக் கேட்காமலேயே சீனா கடன்களை வழங்கியதன் விளைவை, இப்போது இலங்கை அனுபவிக்கிறது. இப்போது சீனா விழித்துக் கொண்டு விட்டது. கேட்டவுடன் இலங்கைக்கு கடன் கொடுக்க அது தயாராக இல்லை . கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் குறித்து திருப்தியடைய முடியாதிருப்பதாக காரணம் கூறி தட்டிக் கழிக்கிறது.

அதாவது, கடனை வழங்கினால் திருப்பிச் செலுத்தும் என்ற நம்பிக்கை சீனாவுக்கு இல்லாமல் போயுள்ளது. அதனால் தான், இப்போது, தனது கவனத்தை வேறு பக்கம் திருப்பியிருக்கிறது சீனா.

இந்த நிலையில், ஜப்பான், இந்தியா, மத்திய கிழக்கு, ஐரோப்பா என வேறேதும் வழிகளின் ஊடாக, நிதியுதவியையோ, கடன்களையோ பெற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கிறது.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமித்ததே, இந்த நோக்கத்தின் அடிப்படையில் தான். அமெரிக்காவின் நண்பனான அவர், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையும் மேற்குலகின் உதவியையும் கொண்டு வருவார் என்று ராஜ பக்ஷவினர் நம்பினார்கள்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவினால் கூட இந்த ஒரு மாத காலத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை . அவரால் மாய வித்தைகளை நிகழ்த்த முடியாது.

முதலாவது, இலங்கையின் நெருக்கடிகள் மிக மோசமான நிலையை அடைந்து விட்டது.

இரண்டாவது, ரணிலாக இருந்தாலென்ன வேறெவராக இருந்தாலென்ன, இலங்கை விடயத்தில், தங்களின் பொதுவான நடைமுறைகளை தாண்டி உதவுவதற்கு, சர்வதேச நாணய நிதியமோ அல்லது மேற்குலக நாடுகளோ தயாராக இல்லை. மனிதாபிமான உதவிகளுக்கு அப்பால் பேரளவு உதவிகளை இலங்கை அரசாங்கத்துக்கு அள்ளி வழங்குவதற்கு மேற்குலகம் தயங்குகிறது. இலங்கையின் நெருக்கடி நாளுக்கு நாள் மோசமடைகின்ற நிலையில், அதே வேகத்துக்கு ஏற்ப உதவிகளையோ, கடன்களையோ கொண்டு



வந்து சேர்க்க முடியவில்லை. அதனால் ரணில் இந்த முயற்சியில் தோல்வியடைந்து கொண்டிருக்கிறார் என்ற நிலையே காணப்படுகிறது. சில நாட்களுக்கு முன்னதாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்டனி பிளிங்கனுடன், பிரதமர் ரணில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தியிருந்தார்.

அப்போது, அன்டனி பிளிங்கன், சர்வதேச நாணய நிதியத்துடனான செயல்முறைகள் முடிந்த பின்னர், முதலீடுகள், உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு உதவுவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார். உடனடி உதவியாக கடந்த வாரம் அமெரிக்கா வழங்கியிருப்பது வெறும் 6 மில்லியன் டொலர் தான். அது ஒரு எரி பொருள் கப்பலை வரவழைப்பதற்குக் கூட போதுமானதல்ல. இலங்கைக்கு அமெரிக்கா சிறியளவிலான உதவிகளை வழங்குகிறது.

அவைளுக்கான உதவிகளாகவே உள்ளன. பெரும்பாலும், தமது நிறுவனங்களின் ஊடாகவே அமெரிக்கா அதனை வழங்கு கிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான செயல்முறைகள் நடந்தேறும் வரை இலங்கைக்கு மேற்குலகின் பெரியளவிலான உதவிகள் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதையே அன்டனி பிளிங்கனின் கருத்து உணர்த்துகிறது.

அதேவேளை, கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கும், சீனத் தூதுவர் கீ சென்ஹோங்கும், சந்தித்துப் பேசியிருக்கின்றதும் முக்கியமானதொரு விடயம். இலங்கையின் நீண்டகால பங்காளியான சீனா இந்த நெருக்கடியான நேரத்தில் உதவ வேண்டும் என்று, அமெரிக்கா சில வாரங்களுக்கு முன்னர் கூறியிருந்தது.

ஆனாலும், சீனா தரப்பில் இருந்து சாதகமான சமிக்ஞைகள் கிடைக்காத நிலையில் தான், அமெரிக்க தூதுவரும், சீன தூதுவரும் சந்தித்து இலங்கை நிலவரங்கள் குறித்து ஆலோசனை நடத்தியிருக்கின்றனர்.

அதேவேளை, சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின் பேரில் கடந்த 8ஆம் திகதி அங்கு சென்ற வெளி விவகார அமைச்சர் பீரிஸ், அந்தப் பயணத்தை பெரியதொரு உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்த நினைத்திருந்தார். `ஷங்ரிலா கலந்துரையாடல்' என அழைக்கப்படும், ஆசிய பாதுகாப்பு மாநாடு ஆண்டு தோறும் சிங்கப்பூரில் நடப்பது வழக்கம்.

அந்த மாநாட்டில் இலங்கை சார்பில் பங்கேற்ற அமைச்சர் பீரிஸ், அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்தார். ஜப்பானிய பிரதமர் கிஷியா பியூ மியோ,ஒஸ்டின், அவுஸ்திரேலிய பிரதி பிரதமர் ரிச்சர்ட்மார்ரலஸ், மற்றும் கனடா,ஜேர்மனி, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளிகளின் பாதுகாப்பு அமைச்சர்கள், வெளி விவகார அமைச்சர்கள் என முக்கிய பிரமுகர்கள் அதில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வின் பக்க அமர்வுகளில் அவர்களைச் சந்தித்து இலங்கைக்கு உதவி கோரும் திட்டம் அமைச்சர் பீரிஸிடம் இருந்தது. குறிப்பாக ஜப்பானிய பிரதமரைச் சந்திக்க அவர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஆனால் அந்தச் சந்திப்பு நடக்கவில்லை .

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவுகள் சீர்குலைந்து போயிருப்பதே அதற்குக் காரணம்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், ஜப்பான் முன்னெடுக்கவிருந்த 1.5 பில்லியன் டொலர் இலகு ரயில் திட்டத்தை அவசியமற்றது என இரத்துச் செய்தார். ஆனால், அது போன்ற இலகு ரயில் திட்டம் பல மாதங்களுக்குப் பின்னர், கோட்டா அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டது.



ஜப்பானின் திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டமை தவறான சமிக்ஞையை டோக்கியோவுக்கு காண்பித்தது. அதனால், ஜப்பான் இந்த நெருக்கடிச் சூழலில் இலங் கைக்கு உதவுவதில் ஆர்வம் காட்டவில்லை.

ஜப்பானிய பிரதமருடன் ஜனாதிபதி கோட்டா தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய போதும், 3.5 பில்லியன் டொலர் உதவிக் கோரிக்கைக்கு இன்னமும் சாதகமான பதில் வழங்கப் படவில்லை .

இவ்வாறான நிலையில் முன்னாள் வெளிவிவகாரச் செயலர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகேயை, டோக்கியோவுக்கான தூதுவராக அனுப்பும் முயற்சிகளில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது.

அதற்குள்ளாக, ஜப்பானிய பிரதமரைச் சந்தித்து நிலைமைகளை சுமுகமாக்குவதற்கு அமைச்சர் பீரிஸ் மேற் கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை.

ஷங்ரிலா கலந்துரையாடலின் பக்க நிகழ்வாக, அவுஸ்ரேலிய பிரதிப் பிரதமரை மட்டும் அவரால் சந்திக்க முடிந்துள்ளது. வேறெந்த சந்திப்புகளையும் அவரால் மேற் கொள்ள முடியாமல் போனது முக்கியமானதொரு பின்னடைவு. அங்கிருந்து, ஜெனிவாவுக்குச் சென்ற அமைச்சர் பீரிஸ், பெரியளவில் உதவிகளைப் பெறக்கூடிய சந்திப்புகளை அங்கும் நடத்த முடியவில்லை

இந்தக் கட்டத்தில் இலங்கைக்கான சர்வதேச நிதியுதவிகளைத் திரட்டிக் கொடுப்பதற்கான பணியைப் பொறுப்பெடுத்திருந்த மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான, மொகமட் நஷீட் அரபு நாடுகளிடம் இதற்காக மேற்கொண்ட முயற்சிகளும் பலனளிக்கவில்லை. சவுதி அரேபியா, மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைவர்கள் சாதகமான பதிலை அளிக்கவில்லை என்றும், விற்பதற்கு ஏதும் இருந்தால் கூறுமாறும், அவர்கள் தன்னிடம் கூறியதாக மொஹமட் நஷீட் குறிப்பிட்டதாக கலாநிதி ஹர்ஷ டி சில்வா கூறியிருந்தார்.

இலங்கைக்கு உதவ உலக நாடுகள் மறுத்து விட்டதாகவும், கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரை உலகத்தின் உதவிகள் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதே கருத்தை, சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரும் வெளியிட்டிருக்கிறார்கள். இலங்கைக்கு உதவுமாறு தாம் விடுத்த வேண்டுகோளை அரபு நாடுகள் நிராகரித்து விட்டதாக கூறிய கருத்தை நஷீட் மறுத்திருக்கிறார். எவ்வாறாயினும், போர் முடிவுக்கு வந்த பின்னர் அரபு நாடுகள் இலங்கைக்கு அள்ளி அள்ளிக் கொடுத்த உதவிகளைப் போல இப்போது வழங்கத் தயாராக இல்லை. எரிபொருளை கடனுக்கு வழங்குவதற்குக் கூட அவை மறுத்து விட்டன. பல நாடுகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி கோட்டா தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தியும் பயனில்லை. இஸ்லாமிய விரோத நிலைப்பாடு கொண்ட அரசாங்கமாக இலங்கை அரசாங்கம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

பா.ஜ.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் நுபுர் சர்மா, அண்மையில் முஹம்மது நபி பற்றி வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்தினால் இந்தியாவுக்கு எதிராகவே, அரபு நாடுகள் திரண்டு நிற்கின்றன.

இவ்வாறான நிலையில், இலங்கையை மட்டும், அவை அரவணைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமடைந்து கொண்டிருக்கும் நிலையில், அதனை சமாளிக்கும் இயலுமை தேய்ந்து போய்க் கொண்டிருக்கும் நிலையில், சர்வதேச ஆதரவை அது இழந்து போயிருப்பது, நெருக்கடிகளை மேலும் மோசமாக்கும் என்றே தெரிகிறது.

# 75 நாட்களைக் கடந்த "கோட்டா கோ கம"

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ஜனாதிபதிக்கு எதிராக 'கோட்டா கோ கம'வில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 75 நாட்களைக் கடந்திருக்கும் நிலையில், அதனை இரண்டாவது கட்டத்துக்குக் கொண்டு சென்றிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருக்கின்றார்கள். ஜனாதிபதி செயலகத்தின் முன்பக்க வாயிலை மட்டுமே அடைத்து போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த இளைஞர்கள் கடந்த திங்கட்



கிழமை ஜனாதிபதி செயலகத்தின் ஏனைய வாயில்களையும் மூடினார்கள். அன்றைய தினம் ஜனாதிபதியின் 73 ஆவது பிறந்த தினமாக இருந்தமையாய் அதற்கு முதல 'நாள் நள்ளிரவு 12.00 மணிக்கு இந்த வாயில்களையும் மூடிய போராட்டக்காரர்கள் ஜனாதிபதிக்கு இது தான் நமது பிறந்தநாள் பரிசு எனவும் அறிவித்தார்கள். இதன் மூலமாக தமது போராட்டத்தை அடுத்த கட்டத்துக்குத் தீவிரப்படுத்த அவர்கள் முயன்றுள்ளார்கள்.

இலங்கையின் வரலாற்றில் இடம் பெறும் நீண்டகாலப் போராட்டமாக இது இருந்தாலும் இதில் ஒரு தொய்வு ஏற்பட்டிருப்பதை அண்மைக் காலத்தில் அவதானிக்க முடிகின்றது. பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ச பதவியைத் துறந்து அலரி மாளிகையிலிருந்து தப்பிச் சென்று சில நாட்களுக்கு தலைமறைவாகியிருப்பதற்குக் கூட இந்தப் போராட்டம் காரணமாக இருந்தது. பசில் ராஜபக்சவும் பதவிகளைத் துறந்து வெளியேறி விட்டார். ஆனால், இப்போது ராஜபக்சக்கள் மீண்டு(ம்) வருவதற்கான ஒரு வெளி திறக்கப்பட்டிருப்பதாகவே தெரிகின்றது. மகிந்த, நாமல் போன்றவர்கள் பாராளுமன்றக் கூட்டத் தொடர்களுக்கு வருகின்றார்கள். பொது நிகழ்வுகள் பலவற்றிலும் கலந்து கெள்கின்றர்கள்.

இதனைவிட, ஜனாதிபதிக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரங்களை 21 ஆவது திருத்தத்தின் மூலமாக வெட்டிக் குறைப்பதற்கு மே 9 காலப் பகுதியில் இணக்கம் தெரிவித்த கோட்டாபய ராஜபக்ச அந்த நிலைப்பாட்டை இப்போது மாற்றிக் கொண்டு விட்டார்.

தோல்வியடைந்த ஜனாதிபதியாக தான் வீடு செல்லப் போவதில்லை என்பதை மட்டும் அவர் சொல்லவில்லை. அதிகாரங்கள் இல்லாத ஜனாதிபதியாக தான் இருக்கப் போவதில்லை என்பதையும் அவர் அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் உறுதிபடக் கூறியிருக்கின்றார். அடுத்த இரண்டரை வருடங்களுக்குத் தான் பதவியிலிருப்பேன் என்பதையும் அவர் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார்.

மே-9 ஆம் திகதிய கலவரங்களின் பின்னர் பதுங்கியிருந்த மொட்டு உறுப்பினர்களும் பாராளுமன்றத்துக்கு வந்து அரசியலமைப்பைத் திருத்துவதானால், பெரும்பான்மையாகவுள்ள தமது ஆதரவு அவசியம் என்பதையும் உணர்த்திக் கொண்டிருக்கின்றார்கள். மொட்டு பாராளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் விரும்பாத அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றைச் செய்ய முடியாது என்ற நிலையில், அவர்களுடைய தேவைக்கு ஏற்ப 21 மாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது. பிரதமராகப் பதவியேற்க முன்னர் இவை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி கொடுத்ததாகச் சொல்லப்படும் வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளது. முக்கியமாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பது குறித்த வாக்குறுதி. பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக் கொண்டமை தான் இவை அனைத்துக்கும் காரணம் என விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றது. கோட்டா கோ கம போராட்டம் தொய்வடைந்தமைக்கும் ரணில் தான் காரணம் என ஒரு தரப்பினர் சொல்லிக் கொள்கின்றார்கள். ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் வகையில் ரணில் செயற்படுவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் குற்றச்சாட்டை முன்வைக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி ஹிருணிகா பிரேமச்சந்திர தலைமையில் 22 யூன் 2022 புன்கிழமை ரணிலின் இல்லத்தின் முன்பாக போராட்டத்தை நடத்தியமைக்கும் அது தான் காரணம். ரணிலுக்கு எதிராகவும் போராட்டம் நடத்த வேண்டிய அரசியல் தேவை ஐக்கிய மக்கள் சக்திக்கு இருக்கின்றது என்பதும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான்.

ஆனால் கோட்டா கோ கம போராட்டம் தொய்வடைந்தமைக்கு ரணில் பிரதமராக பதவியேற்றமை மட்டும் காரணமல்ல. இந்தப் போராட்டத்தை எந்த இலக்கை நோக்கி நகர்த்துவது என்பதில் கூட போராட்டக்காரர்கள் தெளிவாக இல்லை என்ற விமர்சனம் ஒன்றும் முன் வைக்கப்படுகின்றது. இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது காணப்பட்ட மக்களின் உணர்வு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் அதனை நடத்திக் கொண்டிருப்பவர்கள் மத்தியில் உருவாகியிருக்கும் வேறுபாடுகள் இதற்குக் காரணமாக இருக்கின்றது. மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்பது உண்மை தான்.

ஆனால், இந்தப் போராட்டத்தை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது, அரசியல் கட்சிகளுடன் எவ்வாறான உறவுகளைப் பேணுவது, அவர்களுடைய ஆதரவைப் பெற்றுக் கொள்வதா போன்ற விடயங்களில் போராட்டக்காரர்களிடையே தெளிவான ஒரு அணுகுமுறை இல்லை. இதனைவிட இந்தப் போராட்டத்தினால் கிடைக்கக் கூடிய பலன் என்ன என்பதும் இன்றைய தொய்வு நிலைக்கு காரணமாக இரக்கின்றது.

இதனை அரசாங்கமும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கின்றது. உதாரணமாக கடந்த திங்கட்கிழமை போராட்டம் விரிவுபடுத்தப்பட்ட போது நிதி அமைச்சு, திறைசேரி என்பனவற்றின் கதவுகளும் அடைக்கப்பட்டன. ஜனாதிபதி செயலகத்தின் பின்பக்கத்தில் தான் அவை உள்ளன. இதன் காரணமாக சர்வதேச நாணய நிதியத்துடன் பிரதமர் அன்று காலை ஆரம்பித்த பேச்சுவாாத்தைக்கு திறைசேரிச் செயலாளர் உரிய நேரத்துக்குச் செல்லமுடியவில்லை.

இன்றைய நிலையில் நாணய நிதியம் தான் இலங்கையை கடன் பொறியிலிருந்து காப்பாற்றப் போகும் மீட்பராகக் கருதப்படுகின்றது. அவர்களுடனான சந்திப்புக்கு திறைசேரிச் செயலாளர் நேரத்துடன் செல்ல முடியாமைக்கு இந்தப் போராட்டம் தான் காரணமாக இருந்துள்ளது.

அத்துடன் ஒரு ஸ்திரமற்ற நிலையையும் இது உருவாக்கியுள்ளது. இதனால், சர்வதேச நாணய நிதியம் இலங்கையை மீட்கத் தவறினால், இந்தப் போராட்டத்தை அரசு காரணமாகக் காட்ட முற்படும்.

இவை போன்ற பல காரணங்கள் இந்தப் போராட்டத்தில் ஒரு தொய்வு நிலையை ஏற்படுத்தியிருக்கும் பின்னணியில் தான், போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்காக அல்லது அதனைத் தீவிரப்படுத்துவதற்காக எதனையாவது செய்ய வேண்டும் என்ற தேவை போராட்டக்காரர்களுக்கு ஏற்பட்டது. அதனால் தான் ஜனாதிபதியின் பிறந்த தினத்தன்று ஜனாதிபதி செயலகத்தின் ஏனைய வாயிற் கதவுகளையும் மூடி அவர்கள் தமது போராட்டத்தை தீவிரப்படுத்தினார்கள்.

இதன் போது சுமார் 20 பேர் கைதாகி பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். ஜீலை 9 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியை வெளியேற்றுவது எனவும் அவர்கள் அன்றைய தினம் சபதமெடுத்தார்கள்.

என்ன நடைபெறும்? பொறுத்திருந்து பார்ப்போம்!

## ஜனாதிபதியின் கனவு நிறைவேறுமா?

(5ம் பக்கத் தொடர்ச்சி) உண்மையிலேயே கையிலெடுத்தால், தற்போதுள்ள ஆதரவு சூழலைப் பயன்படுத்தி நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாமலாக்கலாம். இது நடந்தால், கோட்டாபய ராஜபக்ஷ தான், கடைசி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருப்பார்.

ஒரு புதிய வரலாற்றை ஆரம்பித்து வைத்தவர் கோட்டாபய என்னும் பெயருடன் அவர் விடைபெற முடியும். இதற்கு அவர் தயாராக இருக்கின்றாரா? வேறு என்ன விடயங்களை செய்தாலும், அவரை தூக்கி நிறுத்தும் வகையில் அப்படியொன்றும் அதிசயங்கள் நடந்து விடப் போவதில்லை. இங்கே குறிப்பிடப்பட்டது போன்று, சில வரலாற்று தீர்மானங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்டால், ஒருவேளை அவரின் கனவு நிறைவேறவும் கூடும்.



# உயர் ஆயுளும் உயிர் கொல்லி நோய்களும்

இலங்கையரின் சராசரி ஆயுள் எத்தனை வருடங்கள்?

75.5 (எழுபத்தைந்து அரை) வருடங்கள் என மத்திய வங்கியின் 2021ஆம் ஆண்டு அறிக்கை கூறுகின்றது.

நீண்ட கால நோக்கில் இதே சராசரியில் அல்லது இதனை விடக் கூடுதலான இலக்கத்தில் தனிமனித சராசரி ஆயுள் இருப்பதற்கான வாய்ப்பு உள்ளதா?

இல்லை என்பதே கவலை தரும் விடையாகும்.

மாநகரம், நகரம், கிராமம் சேர்ந்த ஒரு கலவையே ஒரு நாடு. மாநகரம், நகரப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை ஒரு முறை நோட்டம் விட்டுப் பாருங்கள். உடல் பருமன் பெருத்த மாணவர்களையே பெருமளவில் காண்பீர்கள்.

கிராமப்புறங்களில் வாழ்வாதாரத்துடன் இணைந்த வீட்டு வேலைகள் செய்து, விளையாட்டுக்களில் ஈடுபட்டு வளரும் மாணவர்களே அதிகம். அதனால் அங்கு உடல் ஆரோக்கியமுள்ள மாணவர் தொகை அதிகம். இயற்கையுடன் பெருமளவுக்கு ஒன்றித்து வாழ்வதும், போசாக்கான உணவுகள் கிடைப்பதும், அளவாகச் சாப்பிடுவதும் இன்னொரு காரணம்.

மாணவர்களது வயதுக்கும் உயரத்துக்கும் ஏற்ற உடல் பருமன் இருக்க வேண்டும் என உடற்திணிவுச் சுட்டெண் கூறுகிறது. ஆனால் அதனை விடக் கூடுதலான உடல் பருமன் உடைய மாணவர்களே நாட்டில் அதிகம்.

இதன் தொடர் விளைவு நீண்ட கால நோக்கில் தொற்றா நோய்களான நீரிழிவு, இரத்த அழுத்தம், மாரடைப்பு போன்ற நோய்களை உடைய பெரும் எண்ணிக்கையான மனிதர்கள் உள்ள நாடாக எமது நாடு இருக்கப் போகின்றது. உயர் மருத்துவ சுகாதார வசதிகள் மூலமாக மனித உயிரை உடலில் பிடித்து வைக்கலாம். ஆனால் உடல் உள உற்சாகத்துடன் உழைக்கக் கூடிய பெரிய சனத்தொகையை வைத்திருக்க முடியாது. அதிலும் வயது 40 கள் முதல் 50 கள், 60 களில் உற்சாகமாக உழைக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை இன்னமும் 20 வருடங்களின் பின்பாக குறையத் தொடங்கப் போகிறது.



அதன் விளைவு அறிவுசார் பொருளாதார உழைப்பாளிகளின் திறனில் வீழ்ச்சியை ஏற்படுத்தப் போகிறது. உடல் உழைப்பு மூலமாக வருமானம் ஈட்டுவோர் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கான நிலை தொடரும்.

ஆனால் 21ஆம் நூற்றாண்டானது அறிவுசார் பொருளாதார உழைப்பாளிகள் மூலமாக நாடுகள் வருமானம் ஈட்டும் காலமாக உள்ளது.

இதனால் உடற் திணிபுச் சுட்டெண்ணைப் பேணி ஆரோக்கியம் மிகும் சனத்தொகையில் ஏற்படும் வீழ்ச்சியானது எமது நாட்டின் தேசிய வருமானத்தை மிக மோசமாகப் பாதிப்படையச் செய்யப் போகின்றது. நாடு முழுவதும் வழங்கப்படும் இலவச மருத்துவ சுகாதார வசதிகளின் செலவுகள் அதிகரித்து பொருளாதாரச் சுமை ஏற்படப் போகின்றது.

அதன் விளைவு இலங்கையரின் வாழ்க்கைத் தரத்தையும் பாதிப்படையச் செய்யப் போகின்றது. வெளிநாட்டுக் கடன்களின் சுமைகளினாலும், இறக்குமதிகளில் பெருமளவு தங்கி இருப்பதனாலும், ரஸ்ய—உக்ரைன் உள் நாட்டுப் போராலும், கொவிட்-19 பெருந்தொற்று நோய் காரணமாகவும் தற்போது பொருளாதாரம் அதல பாதாள நிலையில் உள்ளது. அது போன்றதொரு பெரிய பொருளாதார சமூக நெருக்கடியை மீண்டும் சந்திக்கப் போகின்றோம்.

யாழ் நகரிலுள்ள பிரபல கல்லூரியின் அதிபர் கூறுகையில் தனது பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 77 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ தரச் சித்தியைப் பெற்றுள்ளனர். ஆனால் இவர்களில் பலர் உடற் திணிபுச் சுட்டெண்ணின்படி வயதுக்கும் உயரத்துக்கும் கூடிய நிறையைக் கொண்டுள்ளனர்.

77 மாணவர்கள் 9 ஏ எடுப்பதை விட பாடசாலையில் உதைபந்தாட்டம், கிரிக்கெற், எல்லே போல ஒரு விளையாட்டில் ஈடுபட்டும், பிற இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு 5 அல்லது 6 ஏ எடுப்பது சிறந்தது. அத்தகைய ஒரு மாணவரே சவால் மிகுந்த வாழ்க்கைச் சூழ்நிலையை வெற்றி காண்பார். வெறுமனே புத்தகப் பூச்சிகளை உருவாக்கிப் பயனில்லை.

அதிலும் விளையாட்டின் மூலமாக உடல் ஆரோக்கியம் பேணப்படுவதுடன் வெற்றியையும் தோல்வியையும் சமனாக மதிக்கும் மனோபாவம் கிடைக்கும் எனவும் பாடசாலை அதிபர் கூறினார்.

சாதாரண தரத்தில் 9 ஏ, உயர்தரத்தில் 3 ஏ பெறுபேறுகளுக்கு போட்டியிடும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களது உடல் ஆரோக்கியம் குறித்து அக்கறைப்படுவதில்லை.

இதன் தொடர் விளைவு தனிமனித ஆயுளின் உயர்ந்த எண்ணிக்கையின் வேகமான வீழ்ச்சியை ஒரு காலத்தில் காணப் போகின்றோம்.

படி, மீண்டும் படி, மீண்டும் மீண்டும் படி என்ற சுற்றோட்டத்தையே பெற்றோர்கள் பிள்ளைகள் மீது திணிக்கின்றனர்.

ஒவ்வொரு பாடத்திற்கும் 6000 ரூபா முதல் 10 000 ரூபா வரையில் கட்டணம் செலுத்திப் பிரத்தியேக வகுப்புகளை ஒழுங்கு செய்யும் பெற்றோர்கள் கூட இருக்கின்றனர். ஒரு பாடத்திற்கு இரு இடங்களில் ரியுசன் ஒழுங்கு செய்யும் பெற்றோர்கள் கூட இருக்கின்றனர்.

இதன் விளைவு பாடசாலை- ரியுசன் என்ற இறுக்கமான ஒரு சுற்றோட்டத்தினுள் மாணவர்கள் அகப்பட்டு உடற் திணிபுச் சுட்டெண்ணில் பாதகமான நிலையைக் கண்டு பயணிக்கிறோம்.

இதன் தொடர் விளைவு நோயாளிகளால் நிறைந்த நாடு ஒன்றை உருவாக்குகின்றோம். நல்ல நாட்டிற்குரிய அடிப்படைப் பண்பாகிய ஆரோக்கியமுள்ள சமூகத்தை இழந்த வளர்ச்சி எதற்கு?


A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா

6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்

2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை

றொறன்ரோவில் இருந்து புரப்பட்டு இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.

Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick

ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்



- Hopewell Rocks
- Magnetic Hill
- Peggys Cove
- Charlotte Town
- Fisherman-House
- Cavendish-Beach
- Shediac
- Green Gables
- Swiss Air Flight
- Longest Covered Bridge
- Maritime Museum
- Reversing Falls
- Potato Farm
- Quebec City Tour
- st.joseph church
- and More...



a1actour.com@gmail.com

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே 3 to 4 Star Hotel or Motel

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது

முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.

தங்குமிட வசதி | காலை உணவு | பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

416 644 7273 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57

# இயங்கா நிலை நோக்கி நகரும் இலங்கை

கட்டுரையாளர்:
மூத்த பத்திரிகையாளர்
– வீ.தனபாலசிங்கம் –

இலங்கையின் பொருளாதாரம் இயங்கா நிலை நோக்கி விரைந்து நகருகிறது. எரிபொருட்கள் இல்லாததால் பொருளாதார செயற்பாடுகள் முடக்கநிலைக்கு வருகின்றன. பெரும்பாலான அரசாங்க சேவைகளுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது.

ஊழியர்கள் வீடுகளில் இருந்து பணியாற்றுமாறும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுமாறும் கேட்கப்படுகிறார்கள். பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் இடைநிறுத்தப்படுகின்றன. தனியார்துறை ஊழியர்களையும் பெரும்பாலும் வீடுகளில் இருந்து பணியாற்றுமாறு பணிக்குமாறு முகாமைத்துவங்களுக்கு அரசாங்கம் ஆலோசனை கூறுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடு உணவு நெருக்கடியை மேலும் மோசமாக்கியிருக்கிறது. சுமார் 50 இலட்சம் மக்கள் உணவு நெருக்கடியினால் நேரடியாக பாதிக்கப்படப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். நாட்டின் சனத்தொகையில் 22 சதவீதமானவர்களுக்கு உணவு உதவி அவசரமாக தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம் அறிவித்திருக்கிறது.

86சத வீதமான குடும்பங்கள் உணவு நெருக்கடியைச் சமாளிக்க தாங்கள் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்திருப்பதாகவும் போசாக்கு குறைவான உணவை உட்கொள்வதாகவும் ஒரு வேளை உணவை தவிர்ப்பதாகவும் உலக உணவுத் திட்டம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

கர்ப்பிணித் தாய்மார் தினமும் போசாக்கு நிறைந்த உணவை உட்கொள்ள வேண்டும். ஆனால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணிகளால் போதிய போசாக்கு உணவை பெற முடியாமல் இருக்கிறது. சில வேளை உணவை அவர்கள் தவிர்ப்பதால் தங்களினதும் பிள்ளைகளினதும் ஆரோக்கியத்துக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறார்கள்.

நகரங்களில் உள்ள வறிய குடும்பங்களும் மலையக பெருந் தோட்டப் பகுதிகளில் வேலை செய்பவர்களும் பெறும் வருமானங்களில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்ற அதேவேளை பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே போகிறது.

உலகளாவிய மட்டத்தில் தினமும் உணவு மற்றும் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. ஆபத்தான நிலைமையைத் தவிர்க்க விரைந்து செயற்பட வேண்டியிருக்கிறது என்று ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான உலக உணவுத்திட்ட பிரதி பணிப்பாளர் அந்தியா வெப் கூறியிருக்கிறார்.

ஜீன் தொடக்கம் செப்டெம்பர் வரை 17 இலட்சம் மக்களுக்கு உயிர்காக்கும் உதவிகளுக்காக 4 கோடி 70 இலட்சம் அமெரிக்க டொலர்கள் உதவியை சர்வதேச சமூகத்திடம் இருந்து திரட்டுவதற்கான அழைப்பை கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் கடந்த 9 ஆம் திகதி விடுத்திருந்தது. இலங்கைக்காக உணவு உதவிக்கு ஐக்கிய நாடுகள் வேண்டுகோள் விடுத்திருப்பது இதுவே முதற்தடவையாகும்.

உணவு வகைகள் மற்றும் பொருட்கள் விநியோக சங்கிலியும் சீர்குலைந்து போயிருக்கிறது. இந்த விநியோகத்தில் ஈடுபடுகின்ற லொறிகள் போன்ற பெரிய வாகனங்களின் சாரதிகள் தங்களது சேவைகளை மீண்டும் தொடர எப்போது எரிபொருட்கள் கிடைக்கும் என்ற ஏக்கத்துடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மைல் கணக்கில் வரிசைகளில் காத்துக் கிடக்கிறார்கள். பெரும்பாலான விற்பனை நிலையங்களில் பல அத்தியாவசியப் பொருட்கள் பெரும் தட்டுப்பாடாகவுள்ளது. இதனிடையே வர்த்தகர்கள் பதுக்கலில் ஈடுபடுவதாகவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகிறது மக்கள் எதிர்நோக்கப் போகின்ற



பாரதூரமான உணவு நெருக்கடிக்கு இது கட்டியம் கூறுவதாக இருக்கிறது.

இந்த நெருக்கடி குறித்து அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் எச்சரிக்கை செய்கிறார்களே தவிர செயலில் எதையும் காணோம். நிலைமை மோசமடைவதை அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் கடந்த வருடம் ஏப்ரில் மாதம் கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக்கு மத்தியில் இரசாயனப் பசளைகள் இறக்குமதிக்கு தடை விதித்து விவசாயத்துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது தவறை காலந்தாழ்த்தி ஒத்துக் கொண்டு தடையை அண்மையில் நீக்கியபோதிலும், தேவையான பசளை வகைகளை இறக்குமதி செய்ய அரசாங்கத்திடம் வெளிநாட்டு செலாவணி இல்லை. அத்துடன் ரஷ்ய – உக்ரேன் போர் காரணமாக உலகளாவிய மட்டத்தில் பசளைகளின் விலை கடுமையாக உயர்ந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

தொழிற்சாலைகளின் செயற்பாடுகளும் குறைந்து விட்டன. எரிபொருட்கள் தட்டுப்பாடு மற்றும் பொதுப் போக்குவரத்து இன்மையால் சேவைகள் துறையின் செயற்பாடுகளும் முடக்க நிலையில் இருக்கிறது. தனியார் பஸ் உரிமையாளர்கள் தங்களது சேவைகளை கடந்த வாரம் 80 சதவீதத்தினால் குறைத்தார்கள். பஸ்களுக்கு எரிபொருட்களை அவர்களால் பெற முடியாமல் போனால் இவ்வாரம் சேவைகளை முற்றாக நிறுத்திவிடவும் கூடும்.

இந்திய தொடர் கடனுதவியின் கீழான கடைசி டீசல் கப்பல் ஜீன் 16 வந்து சேர்ந்தது. அதற்குப் பிறகு அடுத்த எரிபொருள் கப்பல் எப்போது வரும் என்பது எவருக்கும் தெரியாமல் இருப்பதால் நிலைவரம் இருளார்ந்ததாக மாறியிருக்கிறது.

ஜீன் 23க்கு பிறகு எரிபொருட்கள் விநியோகம் வழமைக்கு திரும்பும் என்று எரிசக்தி,மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறியிருந்தார் என்ற போதிலும், எரிபொருள் கொள்வனவுக்கான புதிய தொடர் கடனுதவி எதுவும் உடனடியாகக் கிடைக்கும் சாத்தியம் தென்படவில்லை என்பதால் அவரது அறிவிப்புகள் பெருமளவுக்கு நம்பிக்கையைத் தருவதாக இல்லை என்று அந்த துறை சார்ந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஊடகங்களில் செய்தி வெளியாகியிருக்கிறது.

அதேவேளை தினமும் மக்களின் ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இது சட்டம்,ஒழுங்கு சீர்குலையும் ஆபத்தைக் கொண்டுள்ளது. கடந்தவாரம் நாட்டின் பல பகுதிகளிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகளில் காத்திருக்கும் மக்களுக்கும் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படைகளுக்கும் இடையே கைகலப்புகள் இடம் பெற்றிருந்தன.

தேவையான டீசலையும் உலை எண்ணெய் மற்றும் அனல் மின்நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியையும் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்ய இயலாமல் போகுமானால் மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படக் கூடிய சாத்தியம் இருக்கிறது. இது நிலைவரத்தை மேலும் மோசமாக்கும். சகல மின்சக்தி மூலங்களில் இருந்தும் விநியோகங்கள் அதிகரிக்கப்படாவிட்டால் அடுத்த மூன்று வருடங்களுக்கு மின்வெட்டை தொடர வேண்டிவரலாம் என்று கடந்தவாரம் இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் எச்சரிக்கை செய்திருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. இத்தகைய சூழ் நிலையில், நெருக்கடி நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அரசியல் வர்க்கம் என்ன செய்யப்போகிறது என்பது முக்கியமான கேள்வி.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்பதற்கான அவசர நடவடிக்கைகளை எடுப்பதற்கென்று சவால்களுக்கு மத்தியில் பிரதமராக பொறுப்பேற்ற விக்கிரமசிங்கவுக்கு அரசாங்கத்துக்குள் இருந்து போதிய ஒத்துழைப்பு கிடைப்பதாக இல்லை.

ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜபக்ஷக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே செயற்படுகிறார்கள் என்பது வெளிப்படையானது.

பிரதமராக விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டது குறித்து ஜனாதிபதியிடம் அவர்கள் தொடர்ச்சியாக அதிருப்தி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கும் நடவடிக்கைகளைத் தான் பிரதமர் முன்னெடுக்க வேண்டும் அரசியலமைப்பு திருத்தங்கள் இப்போது அவசியமில்லை என்று அவர்கள் வெளிப்படையாகவே கூறுகிறார்கள்.

ஜனாதிபதியின் அதிகாரங்களில் குறைப்பைச் செய்து பாராளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் நோக்கில் கொண்டு வருவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற 21ஆவது அரசியலமைப்பத் திருத்தவரைவை கடந்த திங்கட்கிழமை அமைச்சரவை அங்கீகரித்திருக்கிறது. அதை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு ஆளும் கட்சியிடமிருந்து எத்தகைய முட்டுக்கட்டைகள் வரும் என்பதை இப்போதே கூறிவிடமுடியாது.

அதேவேளை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் குறித்து அவர்கள் இருவரும் அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் தனித்தனியாக கலந்தாலோசனை நடத்துகிறார்கள்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான தற்போதைய உறவுமுறை குறித்து பிரபல அரசியல் ஆய்வாளரும் பத்திரிகையாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் கடந்தவாரம் டெயிலி மிரர் பத்திரிகையில் தனது கட்டுரையில் எழுதியபோது தேளும் தவளையும் சம்பந்தப்பட்ட நீதிக்கதையொன்றை நினைவூ ட்டியிருந்தார்.

தேளுக்கு நீந்த முடியாது. ஆற்றைக் கடக்க விரும்பி தவளையிடம் உதவி கேட்டது. முதுகில் ஏற்றிச் செல்லும் போது தேள் தனக்கு கொட்டி விடும் என்று பயந்து தவளை மறுத்து விட்டது. ஆனால் அவ்வாறு செய்ய மாட்டேன், நான் உன்னைக் கொட்டி நீ இறந்தால் ஆற்றில் நானும் மூழ்கி இறக்க வேண்டிவருமல்லவா.... அதனால் நான் ஒன்றும் செய்ய மாட்டேன் என்று தேள் உறுதியளித்தது.

அந்த உறுதிமொழியை நம்பி தவளை தேளை ஏற்றி ஆற்றில் நீந்திச்சென்றது. ஆற்றில் இடைநடுவில் தேள் தனது வாலினால் தவளையைக் கொட்டி விட்டது. தவளை இயங்க முடியாமல் ஆற்றில் மூழ்கியது. தவளையின் முதுகில் ஏறியிருந்த தேளும் மூழ்கியது. மூழ்கிக் கொண்டு போகும போது தவளை தேளிடம் ஏன் இவ்வாறு செய்தாய்? என்று கேட்டது.

அதற்கு தேள் எனக்கு தெரியவில்லை. எனது உணர்ச்சியை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அது எனது இயல்பு" என்று பதில் கூறியது. இறுதியில் இரு பிராணிகளும் ஆற்றில் மூழ்கி இறந்துபோயின.


கதையில் வரும் தேளைப் போன்று கோட்டா. கோட்டா தான்.அவருக்கே உரித்தான இயல்பின்படி அவர் அதிகாரத்தை விட்டுப் போகத் தயாராயில்லை. பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை முன்னெடுப்பதற்கு ரணிலை முழுமையாக அனுமதிக்கவோ அல்லது அவருடன் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளவோ கோதா விரும்பவில்லை.

இங்கு தவளையை தேள் இன்னமும் கொட்டவில்லை.ஆனால் அது கொட்டுவதற்கு தனது வாலை அசைக்கிறது என்பதற்கான அந்தரங்க அறிகுறிகள் தெரிகின்றன என்று ஜெயராஜ் குறிப்பிட்டிருந்தார். பிரதமர் பதவியேற்ற தொடக்கத்தில் அமைதியாக இருந்த எதிரணி கட்சிகள் இப்போது அரசாங்கத்துக்கு எதிராக தீவிரமாகப் பேசத் தொடங்கியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.


எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மார்ச் 15 ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் அவரது ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய போது தனது தலைமையில் அமையக்கூடிய அரசாங்கத்துக்கு சலுகை அடிப்படையில் எரிபொருட்களை வழங்க மூன்று மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்கள் தயாராயிருப்பதாக அறிவித்தார் என்பது எல்லோருக்கும் நினைவிருக்கும்.

அவ்வாறு அறிவித்தவர் பாரிய எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில்
(22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலன் தரும். கடினமான வேலைகளையும் எளிதாக செய்து முடிக்கும் திறமை உண்டாகும். மனதில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வெளியூர், வெளிநாடு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். லாபம் அதிகரிக்கும். தேவையான பண உதவியும் கிடைக்கும். திருவிழா காலங்களில் ஆலய வழிபாடு செய்யவும்





ரிஷபராசி அன்பர்களே! எடுக்கும் செயல்கள் அனைத்தும் வெற்றி பெறும். காரியங்களில் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். புதிய வீடு வாகன சேர்க்கை உண்டாகும். மனதில் இருந்த குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் வீண் அலைச்சலும், வேலை பளுவும் ஏற்படலாம். வார்த்தைகளில் நிதானம் அவசியம்.





மிதுனராசி அன்பர்களே! கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மற்றவர்களால் கை விடப்பட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்திற்கு தேவையான பண உதவி கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும்.





கடகராசி அன்பர்களே! தேவையற்ற வீண் படபடப்பு நீங்கும். நண்பர்கள், உறவினர்களிடம் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணிய பொருட்களை வாங்குவீர்கள். எதிலும் நிதானத்தையும் பொறுமையையும் கடைபிடிப்பது நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்த குழப்பங்கள் நீங்கும்.உத்யோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவர்.




சிம்மராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். தடைகள் அனைத்தையும் தகர்ப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த மந்த நிலை மாறும். பணவரவு நிதானமாக இருக்கும். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியும். மற்றவர்கள் உங்கள் மேல் கொண்டிருந்த கோபம் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும்.




கன்னிராசி அன்பர்களே! வீண் மனக்கவலை நீங்கும். கனவு தொல்லைகள் உண்டாகும். பணவரத்து திருப்தி தரும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பர செலவுகள் ஏற்படும். கோபத்தை கட்டுப்படுத்துவது நன்மை தரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். வியாபார செலவுகள் அதிகரிக்கும். தொழிலை விரிவுபடுத்துவீர்கள். உத்யோகத்தில் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். அதனால் களைப்பு ஏற்படலாம்.





துலாம்ராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் அதிகமாகும். பணவரவு எதிர் பார்த்தபடி இருக்கும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும். தொழில் போட்டிகள் நீங்கும். உத்யோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடை க்க உழைக்க வேண்டி இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். அடுத்தவர் மூலம் மனசங்கடம் உண்டாகும். வாகனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கை தரம் உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை நீங்கும். பொருட்களை உத்யோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவரை நம்பி பொறுப்புக்களை ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். திடீர் பணதேவை ஏற்படலாம். தேவையான நேரத்தில் மற்றவர்களின் உதவி கிடைக்கும். புதிய சொத்து வாங்குவதில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்கவைத்து கொள்வீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மை கிடைக்கும்.




மகராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் அதிக முயற்சி மூலம் வெற்றி கிடைக்கும். பணவரத்து அதிகரிக்கும். கடன் பிரச்னை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நினைத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கவுரவம் அதிகரிக்கும்.தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். பண பிரச்னை தீரும்.




கும்பராசி அன்பர்களே! எந்த காரியத்தை செய்தாலும் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். வீண் பிரச்னைகள் அகலும். நண்பர்கள் உறவினர்களுடன் நீடித்து வந்த மனவருத்தம் நீங்கும். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்யோகத்தில் வீண் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் வரலாம்.




மீனராசி அன்பர்களே! சுபநிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்களில் வேகம் பிறக்கும். பணவரத்து அதிகரித்தாலும் கைக்கு கிடைப்பதில் தாமதம் ஏற்படும். வீடு, வாகனம் மூலம் செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதுரியத்தால் முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் நிர்ப்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# குருந்தூர் மலையும் காலிமுகத்திடலும்

(15ம் பக்கத் தொடர்ச்சி) நூற்றுக்கணக்கான செயற்பாட்டாளர்கள் காலிமுகத் திடலுக்கு வந்தால் போராட்டத்தின் பரிமாணம் வேறு விதமாக அமையும் என்று எதிர்பார்ப்பதாக தெரிகிறது. குமார் குணரட்ணம் வடக்கிற்கு வந்த அதே காலப்பகுதியில் தான் குருந்தூர் மலையில் புதிய தாதுகோப கலசத்தை பிரதிஷ்டை செய்யும் வேலைகள் முடுக்கி விடப்பட்டன. தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களின் எதிர்ப்பினால் அது கைவிடப்பட்டது.

ஆனால் அந்த மரபுரிமை ஆக்கிரமிப்பை குறித்து கண்டியிலும் காலிமுகத்திடலிலும் கோட்டா கோகம கிராமங்களில் எதிர்ப்புகள் காட்டப்படவில்லை. மாறாக இந்தியப் பெரு வணிக நிறுவனமான அதானி குழுமத்துடன் கோட்டாபாய அரசாங்கம் செய்து கொண்ட டீலுக்கு எதிராக காலிமுகத்திடலில் எதிர்ப்புக் காட்டப்பட்டிருக்கிறது.

இது தொடர்பில் விசாரித்த பொழுது அது தொடர்பான செய்திகள் தமக்கு உரிய காலத்தில் கிடைக்கவில்லை என்று கொழும்பு கோட்டா கோகம கிராமத்தை சேர்ந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் தென்னிலங்கையில் போராடும் தரப்புக்கள் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு கிடைத்த மிகப்பிந்திய தருணங்களில் அதுவும் ஒன்று.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு கோட்டா கோகம கிராமத்திலிருந்து செயற்பாட்டாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்கள். கோட்டா கோகம கிராமத்திலிருந்து யாழ்.நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நூல்களை கையளிப்பது அவர்களுடைய வருகையின் நோக்கம். அது ஒரு நன் நோக்கம் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ்மக்களின் கூட்டுக்காயங்களை சுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் அதில் உண்டு. அதே சமயம் தமிழ் மக்களின் கூட்டுக்காயங்கள் இதுபோன்ற நற்செயல்களால் மட்டும் சுகப்படுத்த முடியாத அளவுக்கு ஆழமானவை. தொடர்ந்து புதுப்பிக்கப்படுபவை என்பதைத் தமிழ் செயற்பாட்டாளர்கள் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். குருந்தூர்மலை ஆக்ரமிப்பு அதை நிரூபிக்கக் கிடைத்த ஆகப்பிந்திய உதாரணங்களில் ஒன்று.

# இயங்கா நிலை நோக்கி நகரும் இலங்கை

21ம் பக்கம் பார்க்க) அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி கேட்டபோது மறுத்துவிட்டார். இப்போது அவர் இந்த அரசாங்கத்தை ஒரு கேலிக்கூத்து என்று வர்ணிப்பதுடன் தேர்தல் ஒன்று நடத்தப்படவேண்டும் என்று கோருகிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த தலைவர்களில் ஒருவரான லக்ஷ்மன் கிரியெல்ல ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக பதவி விலகி புதிய ஜனாதிபதியையும் பிரதமரையும் பாராளுமன்றம் தெரிவு செய்வதற்கும் சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதற்கும் வழி விடவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

ஆனால், அதேவேளை அந்த கட்சியின் முக்கிய எம்.பி.க்களான ஹர்ஷா டி சில்வா மற்றும் எரான் விக்கிரமரத்ன போன்றவர்கள் விக்கிரமசிங்கவின் அழைப்பையேற்று பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்திருந்தார்கள். இது பற்றி பிரேமதாச எதுவும் பேசுவதாக இல்லை.

பொதுஜன பெரமுனவுடன் சேர்ந்து பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இப்போது பிரிந்து நிற்கிறது. கோட்டாபய – விக்கிரமசிங்க அரசாங்கம் பதவியில் இருக்கும் வரை சர்வதேச நிதி நிறுவனங்களோ அல்லது உதவி வழங்கும் நாடுகளோ இலங்கையை மீட்டெடுக்க முன்வரப்போவதில்லை என்று சிறிசேன கடந்தவாரம் கூறினார்.

பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளையும் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்று 15 பேர் கொண்ட அமைச்சரவையுடன் அமைக்கப்பட வேண்டும் என்றும் 6 மாத காலத்திற்குள் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் அவர் கோருகிறார். நல்லாட்சிக் காலத்தில் தனக்கும் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் மூண்டதைப் போன்ற போட்டி இப்போது கோட்டாபயவுக்கும் பிரதமருக்கும் இடையில் ஆரம்பித்திருப்பதாகவும் சிறிசேன கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியைப் (ஜே.வி.பி.) பொறுத்தவரை தற்போதைய அரசாங்கத்தை ஒரு சர்வகட்சி அரசாங்கமாக ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. நாட்டை மீட்டெடுக்க ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்கு சர்வகட்சி அரசாங்கம் ஒன்றில் பங்கேற்கத் தயார் என்று அறிவித்திருக்கும் ஜே.வி.பி. 21ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கிறது.

அதேவேளை பொதுஜன பெரமுனவின் நேச அணிகளாக இருந்து தற்போது பிரிந்திருக்கும் விமல் விரவன்ச,உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார போன்றவர்களும் இன்றைய அரசாங்கத்தை கடுமையாக எதிர்க்கிறார்கள். அரசாங்கம் முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவினால் இயக்கப்படுகிறது என்பது அவர்களது நிலைப்பாடு.

இந்த நிகழ்வுப் போக்குகள் சகலதையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது தற்போதைய பாராளுமன்றத்தை வைத்துக கொண்டு பொருளாதார நெருக்கடியையோ அரசியல் நெருக்கடியையோ தீர்க்கமுடியாது என்பது தெளிவாகத்தெரிகிறது. அதன் உறுப்பினர்களின் வகையும் தொகையும் எந்தவொரு உருப்படியான சீர்திருத்தத்தையும் அனுமதிக்காது என்பது இதுவரையான அனுபவமாகும். அதனால் நாட்டு மக்களின் புதிய ஆணையுடன் ஒரு பாராளுமன்றம் தெரிவுசெய்யப்படவேண்டும்.

ஆனால் தற்போதைய நெருக்கடி நிலையில் பொதுத்தேர்தல் ஒன்றை நாடு தாங்குமா என்ற கேள்வி எழுகிறது. அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்கு பிறகு தேர்தலைச் சந்திக்க தயாராகுமாறு பொதுஜன பெரமுன எம்.பி.க்களிடம் ஜனாதிபதி கூறியிருக்கிறார். அந்த நேரத்தில் பொதுத்தேர்தல் ஒன்றுக்கு நாடு முகங்கொடுக்கக்கூடியதாக பொருளாதார நெருக்கடியில் தணிவு ஏற்படுமா?

# பஞ்சம் பசியிலும் திருந்தாத சிங்களப் பேரினவாதம்

(4ம் பக்கத் தொடர்ச்சி) எனினும் வடக்கில் பௌத்த நடைமுறைகளுக்கு கௌரவம் வழங்கப்படவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அண்மையில் நாகவிஹாரையில் புத்த பெருமான் சிலையை நிறுவுவதற்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இந்தநிலையில் குருந்தூர் மலையில் கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பௌத்த சின்னங்களாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், சமய, சமூகப் பணிகளில் நீண்ட காலமாக
சேவையாற்றிவருபவரும் பல வருட காலமாக ஆசிரியப் பணிக்கு
அழகு சேர்த்தவருமான

## கௌரவ. ஸ்ரீமதி. மீனா தவரட்ணம்

அவர்களின்

சேவைநலத்தைப் பாராட்டி உரும்பிராய் பழையமாணவர்களின் அனுசரணையுடன்,
அவரது பழைய மாணவரும் தொழில் அதிபருமான திரு.சாந்தா பஞ்சலிங்கம் நடாத்தும்

# பாராட்டுப் பெருவிழா



JC'S BANQUET HALL
1686 ELLESMERE ROAD,
TORONTO, ONTARIO,
CANADA

**Saturday**
**July 2nd, 2022**
**6:30 PM**

உலகமெங்கும் வாழும் ஸ்ரீமதி தவரட்ணம் அவர்களின்
மாணவர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து
சிறப்பிக்குமாறு உரிமையுடனும் அன்புடனும்
வேண்டுகிறோம்.

**Kindly RSVP by June 20th, 2022**

உங்கள் அன்பான தொடர்புகளுக்கு.
சாந்தா பஞ்சலிங்கம் 416.200.5470 | info@santha.ca
Mohan 416.567.0144 | thavmohmt@gmail.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு
வாங்க..
விற்க..

Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

RANJANI THIRUKESWARAN LAW OFFICE

• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242

Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!

ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

KABIS
• Life Insurance
• Critical Illness • RESP
• Disability • RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)

Foresters | IA Industrial Alliance | Assumption Life

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001

HOMELIFE
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES

$599* FLAT RATE


Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500



அபாயம்
உண்மையாகலாம்.

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.


புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
|---|---|
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%








iA Financial Group

AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.